# மந்திர ஜபத்தின் மகிமை!



ப்ரக்ஞன்

# மந்திர ஜபத்தின் மகிமை

ஆக்கம்

ப்ரக்ஞன்

# நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மந்திர ஜபத்தின் மகிமை |
| ஆசிரியர் | : | ப்ரக்ஞன் |
| வெளியீடு | : | பராபரம் |
| வகை | : | உபதேசம் |
| முதற்பதிப்பு | : | 2018 |
| பக்கங்கள் | : | 95 |
| விலை | : | அக விழிப்பு |
| கணினி அச்சு | : | ஓம் கிராபிக்ஸ் |

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 7 |
| 1 | மந்திரங்களின் வகைகள் | 11 |
| 2 | அட்சராந்தக மந்திரங்கள் | 13 |
| 3 | அட்சராப்ய மந்திரங்கள் | 14 |
| 4 | பீஜ மந்திரங்கள் | 15 |
| 5 | ஒலி அலைகள் | 19 |
| 6 | மந்திரங்களை உச்சரித்தல் | 21 |
| 7 | வாழ்வின் நோக்கமும், மந்திரமும் | 25 |
| 8 | மந்திரத்தின் மகிமை | 29 |
| 9 | முத்தடைகளும், பிரார்த்தனையும் | 33 |
| 10 | ஜபத்தின் நோக்கமும், பலனும் | 37 |
| 11 | குருவும் சாஸ்திரமும் | 40 |
| 12 | விவேகமும், சாதனமும் | 45 |
| 13 | மன அழுக்குகளும், நீக்கமும் | 48 |
| 14 | ஆறாவது அறிவின் அவசியம் | 52 |
| 15 | இருப்பது ஒன்றே | 62 |
| 16 | பிரம்மமும், பிரம்மஞானிகளும் | 70 |

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 17 | தேகமும், தேகியும் | 75 |
| 18 | அகக்கரணமும், புறக்கரணமும் | 81 |
| 19 | ஆன்மாவை அறியும் ஜபம் | 84 |
| | | |

# குரு வணக்கம்

ब्रह्मानन्दं परमसुखदं केवलं ज्ञानमूर्तिं
द्वन्द्वातीतं गगनसदृशं तत्त्वमस्यादिलक्ष्यम् ।
एकं नित्यं विमलमचलं सर्वधीसाक्षिभूतं
भावातीतं त्रिगुणरहितं सद्गुरुं तं नमामि ॥

**ப்ரஹ்மானந்தம் பரமஸுகதம் கேவலம் ஞானமூர்த்திம்**
**த்வந்த்வாதீதம் ககனஸத்ருசம் தத்வமஸ்யாதிலக்ஷ்யம் |**
**ஏகம் நித்யம் விமலமசலம் ஸர்வதீஸாக்ஷிபூதம்**
**பாவாதீதம் த்ரிகுணரஹிதம் ஸத்குரும் தம் நமாமி ||**

**<u>விளக்கம்:-</u>**

பிரம்மானந்த சொரூபமும், பரம சுகத்தை அளிக்கின்றவரும், ஞான வடிவாக இருக்கின்றவரும், இருமைகளுக்கு அப்பாற்பட்டவரும், ஆகாயம் போன்று எங்கும், எதிலும் பரந்து, விரிந்து காணப்படுபவரும், '**தத்வமஸி**' போன்ற மகாவாக்கியத்தின் இலக்ஷியமாக இருப்பவரும், ஒப்பற்றவரும், சாசுவதமானவரும், பரிசுத்தமானவரும், அசையாதவரும், எல்லோருடைய புத்திக்கும் சாக்ஷியாய் விளங்குகின்றவரும், மனதிற்கு எட்டாத நிலையில் உள்ளவரும், முன்றுகுணங்களையும் கடந்தவரும் ஆகிய சத்குருவை நமஸ்கரிக்கிறேன்.

\- குருகீதை.

# மந்திர ஜபத்தின் மகிமை

## முன்னுரை

இந்த "**மந்திர ஜபத்தின் மகிமை**" என்ற நூலை அடியேன் எழுத வேண்டியதின் அவசியம் ஏன் உண்டானது என்றால், அனேக ஆன்மீக சாதகர்களும் அவரவர்களுக்கு பிடித்த, விருப்பமான தெய்வத்தின் நாமத்தை ஜபம் செய்து வருகின்றனர்.

ஒருவன் தனக்கு கொடுக்கப்பட்ட இந்த ஒரே உடலில், பலவிதமான வேலைகளைச் செய்யுமாறு அமைக்கபட்டுள்ள உடல் உறுப்புக்களில் இந்த உறுப்புக்களை நான் மிகவும் விரும்புகின்றேன். இந்த, உடல் உறுப்புக்களை நான் வெறுக்கிறேன் என்று கூறுவது எப்படி அபத்தமாக இருக்குமோ?

அதுப்போன்று, எங்கும், எதிலும், நீக்கமற நிறைந்துள்ள அந்த ஒரே பரப்பிரம்மத்தின் பலவிதமான சக்திகளாக வெளிப்பட்ட பல தேவதைகளின் செயலைக் கண்டு, தனக்கு இந்த, தேவதையை மட்டும் விரும்பு கின்றேன், இந்த, இந்த தேவதைகளை வெறுக்கின்றேன் என்று கூறுவதும் அவனது அறியாமையின் அபத்தம் என்றுதான் கூறவேண்டும்.

இதில் ஒரு சில சாதகர்கள் எதற்காக இறை நாமத்தை ஜபிக்கின்றோம் என்ற புரிதல் இன்றி ஜபம் செய்கின்றனர். அதனால்கூட பரவாயில்லை, அந்த அறியாத இறை நாம ஜபத்தினாலே, ஜபிப்பவரின் மனம், அந்த நாமத்தின் மகிமையினால் தூய்மையை நாளடைவில் அடைந்து விடும். இவ்வாறு மனம் தூயமை அடைவதைத்தான் 'சித்த சுத்தி' என்கின்றோம்.

ஆனால், ஒரு சிலர் அந்த மந்திரத்தின் பலனாக சித்த சுத்தி அடைவதற்குப் பதிலாக, அஷ்டமா சித்துக்கள் கிடைக்க வேண்டும் என்றும், அந்த, அந்த மந்திரத்திற்கு உரிய தேவதையை நேரில் சந்திக்க வேண்டும் என்றும், இன்னும் சிலர் மேலும் ஒரு படி சென்று, மற்றவர்களுக்கு கேடுகளைச் செய்யும் மாந்திரீக முறைகளை கற்றுக்கொண்டு, மற்றவர்களுக்கு தொந்தரவு கொடுக்க வேண்டும் என்றும் தீய எண்ணத்தினால் செயல்படுவதும், இன்னும் சிலர் எந்த மந்திரத்தினைக் கொண்டு, இளம்பெண்களை வசியம் செய்யலாம் என்றும், இதுப்போன்ற அறியாமையினாலே மந்திரங்களை ஜபிக்கின்றனர்.

இந்த நூல் அவர்களது தவறான எண்ணங்களை மாற்றி, மந்திர ஜபத்தின் உண்மையான நோக்கம், எதுவாக இருக்க வேண்டும் என்பதையும். இறை நாம ஜபத்தின் மகிமையையும், அதற்குத் தேவையான அறிவையும் வெட்ட வெளிச்சமாக வெளிப்படுத்தி விடுகின்றது.

எந்த ஒரு ஆன்மீக சாதகனும், சத்குருநாதரும், சாஸ்திர விசாரமும் இன்றி, அந்த ஜபத்தின் பலனாக இறைவனை அறிய முடியாது என்பதையும், இந்த

இரண்டையும், இரண்டு கண்களாக எவன் ஒருவன் பாவித்து, சத்குருநாதரின் உபதேச மந்திரத்தை விடாமல் அனுதினமும், மனதினால், ஜபம் செய்து வருகின்றானோ?, அதன் அபரிமிதமான பலனாக, தனக்கு கிடைத்த, இந்த மானிடப் பிறவியின் பெரும் பயனை இப்பிறவியிலேயே, அடைந்து விடுகின்றான் என்பதை ஆணித்தரமாக அறிந்துக் கொள்ளலாம்.

காரணம், அந்த சாதகன் இந்த பிறவிக்கு முன்பாக, பலகோடி ஜென்மங்களில் செய்த பல்வேறு புண்ணியத்தின் பலனாக, அவனுக்கு தற்பொழுது இந்த "மந்திர ஜபத்தின் மகிமை" என்ற நூல் மிகவும் அரிய பொக்கிஷமாக அவன் கையில் கிடைத்துள்ளது என்றால், அது மிகையாகாது.

இந்த நூலின் வாயிலாக அந்த பரம்பொருளின் பரம பவித்ரமான சுவாஸத்தினை தன்னுடைய சுவாஸமாக அறிந்து கொண்டு, அன்றைய ரிஷி முனிவர்கள் அடைந்த அந்த பேரானந்த பெரு நிலையை தன்னுடைய அன்றாட சுவாஸத்தினாலேயே, இவனும் அறிந்து, தன்னை அறிந்து தன் மயமாக மாறுவதற்காகவே, மிக அற்புதமான மகாமந்திரத்தை இந்த நூலின் வாயிலாகவே அறிந்து கொண்டு, அந்த பரப்பிரம்மத்தின் பரமானந்த பரவச நிலையை இவனும் அடைகின்றான்.

எனவே, இந்த நூலைப் படிக்கின்ற சாதகர்கள் மிகவும் சிரத்தையாக படித்து, அந்த பவித்ரமான மகா மந்திர உபதேசத்தை அறிந்து, அதனை அனுதினமும் தன்னுள் ஓடுகின்ற சுவாசமாகவே உணர்ந்து, சதா அதனை தியானித்து, பிறவாப் பெருநிலையாகிய

மோக்ஷத்தை அடைய வேண்டும் என்பதே, இதை இங்கு உபதேசிப்பதின் உன்னத நோக்கம் ஆகும்.
ஆகவே, மிகவும் நம்பிக்கையுடனும், ஆழ்ந்த குரு பக்தியுடன் இந்த நூலைக் கற்று, அதன் பயனை முழுமையாக அறியும் பொழுது, என்றும் நிலையான ஆனந்தம் அவர்களுள் நிலைப்பெற்று நிற்கும் என்பதில் எந்தவித ஐயமும் அவசியமில்லை.

நன்றி!

என்றும் அன்புடன்,

**ப்ரக்ஞன்.**




ஜபமாலையை உருட்டும் முறை!

# 1. மந்திரங்களின் வகைகள்

பொதுவாக மந்திரம் என்பதை **மனம்+திரம்** என்று பிரித்து, அதனை மனதின் திரம் = **மந்திரம்** என்று அறியலாம்.

அதாவது மனதை உறுதிப்படுத்த அதற்கு கொடுக்கப்படுகின்ற பயிற்சி முறையில் மந்திரம் பயன் படுத்தப்படுகின்றது.

மந்திரம் என்ற சொல் சமஸ்க்ருத மொழியில் இருந்து வந்தது. "**மந்**" என்றால் மனம்; "**திர**" என்றால் விடுதலை.

ஆகவே மந்திரம் என்பது நம் மனதை பல உலகார்ந்த எண்ணங்களில் இருந்து விடுதலையாக்க உருவாக்கப்பட்ட உன்னத ஒலிகளின் ஒரு கூட்டமாகும்.

மந்திரத்தை **மனனம்+திரயதே** என்றும் பிரிக்கலாம்.

“**மனனம்**” என்றால் ‘**நினைப்பது**’, ஜபிப்பது, உச்சரிப்பது எனப் பொருள் கொள்ளலாம். “**திரயதே**” என்றால் ‘**காப்பாற்றுதல்**’ என்று பொருள்.

ஆக, மந்திரம் என்பது ஜபிக்கின்றவர்களை அல்லது உச்சரிப்பவர்களை காப்பாற்றுவது என்று பொருள்.

மற்றொரு வகையில் "**மந்**" என்றால் ‘**மனம்**’, "**திர**" என்றால் ‘**பிராணன்**’. அதாவது மனத்தையும், பிராணனையும் ஒன்றாக கலக்கச் செய்வது “**மந்திரம்**” எனப்படும்.

பிரபஞ்சத்தின் தோற்றம் ஒலியில் இருந்தே உற்பத்தியாகியது என்று சாஸ்திரம் எடுத்து கூறுகின்றது.

மந்திரங்கள் பிரபஞ்சத்தில் உள்ள தெய்வீக சக்தியின் அதிர்வலைக் குறியீடுகள் எனப்படும். ஒவ்வொரு வகை தெய்வ சக்திக்கும் ஒவ்வொரு அதிர்வலைகள் உண்டு.

அப்படிப்பட்ட மந்திரங்களை மூன்று வகைகளில் பிரித்து அறியலாம். அவைகள்,

1. **அட்சராந்தக மந்திரங்கள்,**
2. **அட்சராப்ய மந்திரங்கள்,**
3. **பீஜ மந்திரங்கள்** என்று வகைப்படுத்தலாம்.

# உ. அட்சராந்தக மந்திரங்கள்

சப்தத்தில் இருந்து மொழி வந்தது, மொழியில் இருந்து மந்திரம் வந்தது. மனதுக்கு திறம் தருவது மந்திரம்.

அட்சராந்தகம் என்பது எழுத்துக்களின் மூலமாக எழுதாமல், காலம் காலமாக காதுகளின் வழியாக மட்டுமே ஒரு ரிஷி கூறக் கேட்டு, மற்ற ரிஷிகளுக்கு அவரது காதுகளில் உபதேசித்து வருவதும், அவர்கள் மற்றவர்களுக்கு அதேமுறையில் உபதேசித்து வருவதும் என வழக்கத்தில் இருந்தது.

உதாரணமாக, வேதமந்திரங்களும் இவ்வாறுதான் காதுகளினால் மட்டுமே அன்றைய காலங்களில் உபதேசிக்கப்பட்டன. அதனால், வேத மந்திரங்களை '**எழுதாக்கிளவி**' என்று அழைக்கின்றனர்.

# 3. அட்சராப்ய மந்திரங்கள்

அட்சராப்யம் என்பது எழுத்தில் எழுதப்பட்டு இருக்கும். அதாவது மொழி தோன்றி, அதன் பின் அந்த மொழியில் எழுத்தக்களாக எழுதப்பட்ட மந்திரங்களாகும். அவைகள், **இறை நாமங்கள், காயத்ரி மந்திரம், கந்தசஷ்டி கவசம், நாராயண கவசம், சுப்ரபாதம்** போன்றவைகள்.

# 4. பீஜ மந்திரங்கள்

பீஜம் என்பது மனித உடலோடு ஒன்றிணைந்து அதாவது, சக்கரங்களின் மத்தியில் ஒலிக்கும் ஒலியின் சப்தமாகிய மந்திரங்கள் ஆகும்.

நம் பண்டைய ரிஷிகள் **மந்திரம், தந்திரம், யந்திரம், ஔசதம்** போன்ற பல வழி முறைகளைச் சாதனைகளாகப் பயின்று, அதில் வெற்றி பெற்று, அஷ்டமகா சித்திகளைப் பெற்றிருந்தார்கள்.

அன்றைய ரிஷிகள் மனித உடலில் உள்ள ஆறு ஆதாரச் சக்கரங்களின் மையத்தில் உள்ள பீஜ மந்திரங்களை மற்றவர்களுக்கு உபதேசிக்க வேண்டி, அதன் அக்ஷரங்கள் எல்லாவற்றையும் தங்களது தவ வலிமையால், ஞான நிஷ்டையில் அறிந்துக் கொண்டு, அந்த மந்திரங்களை உருவாக்கினார்கள்.

இவைகள் பெரும்பாலும் **யந்திரங்கள்** என்ற முறையில் சக்கரங்களில் எழுதப்பட்டிருக்கும்.

யந்திரங்கள் என்கிற போது **மண்டலம், யந்திரம்** என்று இரண்டு பிரிவுகள் உண்டு.

ஆனால், நாம் அவைகள் இரண்டையுமே **யந்திரங்கள்** என்று பொதுவாக சொல்கின்றோம்.

**மண்டலங்கள்** என்பது ஆன்ம வரைபடம், அல்லது பேரண்ட வரைபடமாகும்.

**யந்திரம்** என்பது ஒரு குறிப்பிட்ட தேவதை வழிபாட்டின் மூலம், அதன் சக்தியைப் பெறுவதற்காக, பயன் படுத்தப்படுவது.

திருமந்திரம் மண்டலங்களைச் சக்கரங்கள் என்று சொல்கிறது.

பீஜ மந்திரங்கள் பெரும்பாலும் செப்பு, தங்கம், வெள்ளி போன்ற தகடுகளில் யந்திரங்களாக எழுதி வைக்கப்பட்டிருக்கும்.

அதிகமாக செப்புதான் பயன்படுத்தப்படும்.

ஏனென்றால், அது ஒரு மின் கடத்தி.

மின்சாரம் கண்டுபிடிப்பதற்கு முன்பாகவே, செப்புவின் அரிய ஆற்றலை அன்றைய ரிஷிகள் அறிந்திருந்தார்கள்.

அந்த செப்பு ஆற்றலைக் கடத்துவதோடு மட்டுமல்லாமல் அதன் சக்தியை தன்னோடு தக்க வைத்துக் கொள்ளவும் வல்லது.

பீஜாட்சரம் எழுதிய செப்புத் தகடின் மேல் விளக்கொளி படும்போது, அது மெல்லிய சக்திக்கு ஆட்படுகிறது.

மேலும் இடையறாத மந்திர சப்த அலைகள் அதன் மேல் படும்போது, அவைகளை அப்படியே தன் மேல் பதிய வைத்துக் கொள்கிறது.

இதைத்தான் **மந்திர உருவேற்றுதல்** என்பார்கள்.

முறைப்படி மந்திரத்தை உருவேற்றப்பட்ட செப்புத் தகடானது தன்மேல் பதிந்துள்ள ஒலி மற்றும் ஒளி அலைகளை மின் காந்த அலைகளாக கசிய விட்டுக் கொண்டே இருக்கும். குறிப்பிட்ட காலம் வரை அந்த சக்தி அதில் நிலைத்திருக்கும். ஆனால், அவைகள் நம் பார்வைக்கோ, செவிப் புலன்களுக்கோ புலப்படாது.

அந்த நுண்ணிய ஒலி மற்றும் ஒளி அலைகளின் மின்காந்த சக்தியானது அந்தத் தகடு இருக்கும் இடத்தில் உள்ளவர்கள் உடம்பில், அவர்களது மனதில் செயல் மாற்றத்தை உண்டாக்கும்.

இப்படி மறைவான இயக்க சக்தியாக இருப்பதால், அதை **யந்திரங்கள்** என நம்முடைய முன்னோர்கள் அழைத்தனர்.

இதைப் புரிந்து கொள்ளாத வரை, அது வெறும் தகடு, கோணல்மானலாக அதில் கிறுக்கப்பட்ட பல்வேறு கோடுகள், என்று அறியாமை உள்ளவர்கள் கூறுவார்கள். உண்மையை அறிந்தவர்களுக்கு அது மனித உடலிலும், மனதிலும் மாற்றத்தை உண்டாக்கும் யந்திரம் ஆகும்.

இந்த யந்திரங்கள், மந்திரங்கள் இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் அவரவர்களின் தேவைக்கு ஏற்ப பயன்பாட்டில் உள்ளன. மொத்தத்தில் மந்திரம் பதிவாகி செயல்படும் இடம் யந்திரம். இந்த இரண்டையும் பயன்படுத்தும் திறனே தந்திரம்.


# 5. ஒலி அலைகள்

இன்றைய நவீன அறிவியல் ஒலி அலை அதிர்வுகளை பற்றி விளக்குகின்ற பொழுது, “ஒலி” (*Sound*) என்பது பொதுவாக காதுகளால் கேட்டு உணரக்கூடிய அதிர்வுகளைக் குறிக்கும்.

அறிவியல் அடிப்படையில் ஒலி என்பது "அழுத்தமாற்றம், துகள் நகர்வு, அல்லது துகள்களின் திசைவேகம் ஆகியவை ஒரு விரிந்து கொடுக்கக்கூடிய ஊடகத்தில் பயணித்தல்" ஆகும்.

அதிர்வுகள் காற்று அல்லது நீர் போன்ற ஏதாவது ஒரு ஊடகத்தின் வழியாக காதுகளுக்குப் பயணித்து, அங்கு நரம்புக் கணத்தாக்கங்களாக மாற்றப்பட்டு மூளைக்கு அனுப்பப்படும் போது, மூளையினால் அந்தக் கணத்தாக்கங்கள் ஒலியாக உணரப்படுகின்றது.

ஒலி அலைக்குறிகளின் விளக்கப்படம்



ஒலி அலைகள் ஒரு பொருளின் அதிர்வினால் உண்டாகின்றவை. ஒரு பொருளின் ஒவ்வொரு அதிர்வும் காற்றில் ஒலி அலைகளை உருவாக்குகிறது.

அந்த ஒலி காற்றின் வழியாகப் பயணம் செய்யும் போது, ஒலி அலைகள் (Sound Waves) அளவிலும், வடிவத்திலும் ஒளி அலைகளையே (Light Waves) ஒத்துள்ளன.

கடினமான மலை போன்ற பகுதியை நோக்கிச் செல்லும் ஒலி அலைகள் அதைத் தாக்கி மேற்கொண்டு செல்ல இயலாமல் மீண்டும் தோன்றிய பகுதிக்கே வரும். இந்த எதிர்ச் செயற்பாடுதான் 'எதிரொலி' என அழைக்கப்படுகிறது.

ஒரு பகுதியின் இயற்கை அதிர்வுடன் அதே அளவான அதிர்வுகள் பரிவுறும் போது, சக்தி கடத்தப்படும், இதே கோட்பாடுதான் மந்திர சாதனையிலும் நிகழ்கின்றது.

ஒரு மந்திரம் பிரபஞ்ச சக்தியின் இயற்கை அதிர்வினை ஒத்து நம் மனதிற்குள் ஒரு அதிர்வினை உருவாக்கி சக்தியினைப் பெற்றுக் கொள்ளும். இவ்வாறு மந்திரங்களை உச்சரிக்கும் போதும் அதுதான் நடக்கிறது.

# 6. மந்திரங்களை உச்சரித்தல்

மந்திரங்களை நாம் மூன்று வழி முறைகளில் உச்சரிக்கலாம்.

அவைகள்,

1. **வாசிகம்**
2. **மானஸம்**
3. **உபாம்சு** என்பனவாகும்.

## 1. வாசிகம்

இது தெளிவான உச்சரிப்புடன் மற்றவர்களுக்கு வெளியே கேட்கும் படி மந்திரத்தினை கூறுவது ஆகும்.

இது வெளிமண்டலத்தில் இருக்கின்ற தேவதை களின் தெய்வ சக்தியினை கவரும் முறை, ஆனால் இதில் எதிர்தடங்கல்கள் அதிகம், இதில் ஜபிக்கும் மந்திரம் அந்த தேவதையை அடையும் முன்பாகவே, சில ஒலி கடத்தாத் தடைகளினால் தடுக்கப்பட்டு விடும். இதனால் ஜபிப்பவர் பெறும் சக்தி குறைவு.

ஆனால், சரியான சூழலில் தெய்வ சக்தியினை விழிப்படையச் செய்யலாம், பொதுவாக கோவில்களில் பிராமணர்கள் பூஜை செய்யும் போது இந்த முறையினையே பின்பற்றுகின்றனர்.

## உ. மானசீகம்

இதில் உதடுகள் அசையாமல் மனதிற்குள் ஜபிக்கும் முறை, மனதின் எண்ண அலைகள் மட்டுமே மந்திர சப்தமாக உருவாகிக் கொண்டிருக்கும்.

இதில் புற உலகில் தெய்வ சக்தியினை விழிப்பிக்க முடியாது, ஆனால் மானசீகமாக இதனை நாம் செயற்படுத்தலாம்.

இதில் ஜபிக்கும் மந்திரம் அந்தக்கரணமான மனதைச் சார்ந்து இருந்தால் மனம் எளிதில் செம்மைப் படும். இதன் பலன் மிக உயர்ந்தது

## ௩. உபாம்சு

இந்த முறையில் ஜபம் செய்யும் பொழுது உதடுகள் அசையும் ஆனால், அருகில் உள்ளவர்கள் கேட்க முடியாதபடி தனக்குள் மட்டும் கேட்குபடி ஜபித்தல் ஆகும், சாதகரின் காதில் மட்டும் அவர் ஜபிப்பது கேட்கும்.

இது மேற்கூறிய இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் செயல் படுவதாகும். இவ்வாறு சில மந்திரங்களை ஜபிப்பதே சிறந்தது.

ஏனென்றால், **உபாம்சு** முறையில் வாசிக ஜபத்தில் உடலிற்கு வெளியில் உள்ள தெய்வ சக்தியினையே விழிப்பிக்க முடியும். அதுவே, மானசீக ஜப முறையில் உடலிற்கு உள்ளே உள்ள தெய்வ சக்தியினை மட்டுமே விழிப்பிக்க முடியும்.

ஆனால் உபாம்சு ஜப முறை இரண்டுக்கும் இடைப்பட்டது. இது அகப்பிரபஞ்சத்திலுள்ள தெய்வ சக்தியினையும், புறப்பிரபஞ்சத்திலுள்ள தெய்வ சக்தியினையும் ஒரே நேரத்தில் விழிப்பிக்கும் தன்மை கொண்டது ஆகும்.

உபாம்சு முறை மந்திர ஜபத்தால் அவர்களது அகப்பிரபஞ்சத்திலும் தெய்வசக்தி விழிப்படைந்து முன்னேற்றம் ஏற்படும் அதே வேளை புறப் பிரபஞ்சத்திலும் தெய்வ சக்தியும் செயற்படும்.

இதனால், மந்திரத்தை ஜபிக்கின்றவரும் பயன் பெறுவார், அவரை சுற்றி உள்ளவர்களும் பயன் பெறுவார்கள்.

மேலே குறிப்பிட்டுள்ள எல்லா முறைகளுமே சிறந்தவைகள்தான் என்றாலும், ஜபிப்பிக்கின்றவர்களின் நோக்கம் என்ன என்பதின் அடிப்படையில் மட்டுமே நாம் அவற்றைத் தேர்வு செய்ய வேண்டும்.

உலகப்பற்று, மற்றும் அனைத்தினையும் துறந்து, மோக்ஷத்தினை மட்டும் விரும்பிய பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷி, பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் போன்றவர்களை போல, முக்தி மட்டுமே நோக்கம் எனில் **மானசீக ஜெபம்** சிறந்தது.

உலகப் பற்று, பொருள் பற்று, நினைத்த காரியங்கள் கைக்கூட விரும்புகின்றவர்களுக்கு **வாசிக ஜப முறை** சிறந்தது.

உலகக் கடமைகளையும் செய்துக் கொண்டு, அகத்தில் ஆன்மீக முன்னேற்றத்தினை பெற்று, புறத்திலும் தான, தர்மங்கள் போன்ற நன்மையினை செய்துக் கொண்டு, போகத்தினையும் யோகத்தினையும் தடையற பெறவேண்டும் என்றால் **உபாம்சு முறை** சிறந்தது.

இப்படி எத்தனைவிதமான மந்திரங்கள், எத்தனை விதமான ஜபங்கள், எத்தனை, எத்தனை வித விதமான பலன்கள், என்று ஆராய்ந்தோமானால், இந்த ஆயுள் நமக்கு போதாது, இன்னும் பல பிறவிகளில் வந்து இவைகளை அறிந்து பயன் அடையலாம்.

# 7. வாழ்வின் நோக்கமும், மந்திரமும்

சாஸ்திரம் மனிதனின் வாழ்வியல் புருஷார்த்தம் என்பதை அறிவிக்கும் பொழுது. **அறம், பொருள், இன்பம், வீடுபேறு** என்ற வகையில், அவன் வீடுபேறு பெற செய்கின்ற சாதனை மட்டுமே சிறந்தது என்று அறிவிக்கின்றது.

வீடுபேறு என்பது இந்த உடலை விட்டு விட்டு இறந்து போன பின்பு, எங்கோ வேறு லோகத்தில் (சொர்கம், நரகம்) உள்ள வீட்டிற்கு சென்று அங்கு அனுபவிக்கும் சுக துக்கங்கள் அல்ல.

இந்த பூமியில் வாழும் போதே, அறவழியில் வாழ்ந்து, அதனால் கிடைத்த பொருட்களை அடைந்து, அதன்வாயிலாக இன்பத்தை பெற்று, இறைவனை அறிந்து, இறுதிவரை இந்த உலகத்தில் இன்பத்துடன் நிறைவாக வாழ்ந்து, இறவா நிலை அடைவதையே சாஸ்திரம் முறைப்படுத்தி, "**புருஷார்த்தம்**" என்கின்றது.

இந்த வழிமுறையில் மனிதன் வாழ்க்கையை வாழ்ந்து சாதிக்க, சாஸ்திரம் மேலும் சில சாதனைகளை அறிமுகப்படுத்துகின்றது.

அதில் ஒரு சாதனையாக இந்த "**மந்திரஜபம்**" சாஸ்திரத்தில் வருகின்றது.

இப்படிப்பட்ட ஆயிரக்கணக்கான மந்திரங்களை அறிவதும், அதன் பயனைப்பெற நினைப்பதும், மனிதனின் மனம் சார்ந்த விசயமாக இருப்பதால், முதலில் அந்த மனிதன் **மனதை செம்மைப்படுத்தும்** வழிமுறைகளை அறிய வேண்டும்.

இதிலிருந்து, எத்தனையோ மந்திரங்கள் இருந்தாலும், எத்தனை விதமான சிறப்பான பலன்களை அவைகள் கொடுத்தாலும், மனதினை தூய்மைப் படுத்தாத எந்த மந்திரத்தினாலும் அவன் அடைய வேண்டிய நல் நிலையை அடைய முடியாமல், பக்க விளைவுகளாக பல பாதிப்புக்களை அதைப் பயன் படுத்துபவர்கள் அடைய வேண்டியது வரும்.

அதாவது, மனதினை செம்மைப்படுத்த மட்டுமே மந்திரங்கள் பயன்பட்டாலும், அது எதற்கான மந்திரம், அந்த மந்திரம் எத்தகைய பலனைக்கொடுக்கும் என்பதில் தெளிவு இருக்க வேண்டும்.

அவ்வாறு தெளிவு இல்லாமல், பொருளாசை, பதவி ஆசை, புகழ் பெறும் ஆசை, சித்துக்கள் அடையும் ஆசை, மாந்திரீகம் செய்ய விரும்பும் ஆசை என்று ஆசைகளுக்கு ஏற்ப மந்திரங்களை உண்மைத் தன்மை அறியாமல் மாற்றி, மாற்றி உபாசனை செய்யப் படும் பொழுது, அதன் பலன் விபரீத பலனாக மாறி, ஜபிக்கின்றவர்களுக்கு நன்மை செய்வதற்கு பதிலாக, கேடுகளைக் கொடுத்து விடும்.

அது எப்படியென்றால், ஒலிக்கின்ற மந்திரம் காற்றலைகளில் பயணம் செய்து, இந்த பிரபஞ்சத்தின் பல பகுதிகளில் உள்ள நல்ல சக்தி, கெட்ட சக்திகளை கொண்ட தேவதைகளிடையே கலந்து உள்வாங்கி, ஜபம் செய்யும் சாதகனின் சலனமான மனதின் எண்ணங் களுக்கு ஏற்ப பிரதிபலித்து, அந்த சக்தி சாதகனின் தேவையின் உண்மைத் தன்மையை அறிவதில் சிக்கல் உண்டாக்கி விடுகின்றது.

இவ்வாறு, ஜப மந்திரத்தின் உச்சரிப்பில் ஏற்பட்ட மாற்றம், மற்றும் மந்திரத்தின் உட்பொருள் மாற்றம் என சாதகனை தவறான சூழ் நிலைக்குத் தள்ளி அவனை மன ரீதியாக பாதிப்புகளுக்கோ அல்லது உடல் ரீதியாக பாதிப்புகளுக்கோ உண்டாக்கி, அவனது வாழ்க்கைச் சூழ்நிலைகளையே மாற்றிவிடும் வாய்ப்பும் உள்ளது.

ஆகவே, தேவையற்ற சித்துகள், மற்றவர்களைக் கெடுக்கும் மாந்திரீகங்கள், அழியக்கூடிய பொருட்களை தருகின்ற விசயசுகங்கள் போன்றவைகளுக்கு ஆசைப் படாமல், என்றுமே அழியாத அந்த பரம்பொருளை விரும்பி செய்கின்ற ஜபத்திற்கு, ஈடுஇணை ஏதுமில்லை.

இதில் மனிதனை மகத்தானவனாக மாற்றக்கூடிய மந்திரங்களிலேயே மிக உயர்ந்த, உன்னதமான மந்திரம் ஒன்று உண்டென்றால், அது இறைவனை அறியக் கூடிய மஹாமந்திரமே ஆகும்.

அப்படிப்பட்ட மஹா மந்திரத்தினை அறியும் முன்பு, இறைவனின் நாமத்தையே குருவின் வாக்கினால் மந்திர உபதேசமாக பெற்று, அந்த மந்திரத்தை ஜபித்து வருகின்றவர்களுக்கு, அந்த மந்திரத்தின் பலனாக, மனத்தூய்மை உண்டாகி, அதனால், கற்கின்ற சாஸ்திரம் புரிந்து, ஆத்ம ஞானத்தை பெற்று, தன்னை உணர்ந்து, இறைவ(தன்)னை அறியும் ஆற்றல் கிடைக்கப்பெறும்.

அப்படிப்பட்ட தன்னை உணர்ந்த தத்துவ ஞானிகள், முன்னை வினையின் முடிச்சை அவிழ்க்க இந்த மந்திர சாதனையும் பலனளிக்கும்.

# 8. மந்திரத்தின் மகிமை

குருவின் மந்திர உபதேசத்தை அறிந்து, சதா காலமும் அதையே ஜபம் செய்து வருவது, அனேக ஜன்மங்களில் செய்த பாவ கர்மங்களெல்லாம் பஞ்சு பொதியில் பிடித்துக் கொண்ட நெருப்பு எப்படி அந்த பஞ்சு மூட்டைகளை அடையாளம் தெரியாத அளவிற்கு உருமாற்றி சாம்பலாக பஸ்பம் ஆகி விடுகின்றதோ, அதுப்போல, இந்த மஹாமந்திரம் உங்கள் இரு வினைகளை (சஞ்சிதம், ஆகாமியம்) பஸ்பம் செய்து விடும்.

இதற்கு எப்படி உத்திரவாதம் என்றால்,

**பஞ்சினை யூழித்தீப்போற்**
**பலசென்ம விவித வித்தாஞ்**
**சஞ்சித மெல்லாம் ஞானத்**
**தழல்சுட்டு வெண்ணீ றாக்கும்**
**கிஞ்சில் ஆகாமி யந்தான்**
**கிட்டாமல் விட்டுப்போகும்**
**விஞ்சின பிராரப்தத்தின்**
**வினை அனுபவித்துத் தீரும்.** - கைவல்ய நவநீதம்.

ஆதலால், உலகத்திலுள்ள மாயையின் வசப்பட்ட அப்பாவி ஜனங்களெல்லாம் ஞானத்தை

அடைய வேண்டுமென்று, ஆதி குரு தட்சிணாமூர்த்தி முதற்கொண்டு இன்றைய குருமார்கள் வரை அனைவருமே விரும்புகின்றனர்.

ஒருவன் தன் வியாதியை குணப்படுத்தி, நீக்கிக் கொள்ள வைத்தியரும், மருந்தும் எப்படி அவசியமோ, அதுப்போல ஞானத்தை அடைய விரும்பும் ஒருவனுக்கு அவனது மனதிலிருக்கும் ஆசையென்ற அழுக்குகளை நீக்கிக் கொள்ள குருவென்ற வைத்தியனும், அவரது உபதேசத்தினால் கிடைத்த மந்திர மருந்தும் அவசியம் வேண்டும்.

அப்பாவி ஜனங்களின் சம்ஸார நிவர்த்தி **(சம்ஸாரம் - பிறப்பு, இறப்பு)** ஞானத்தினால் மட்டுமே உண்டாகுமேயன்றி, கர்மத்தினால் உண்டாகாது.

அதாவது, எது நித்தியம், எது அநித்தியம் என்ற விவேகம் ஒருவனுக்கு உண்டாகாமல், அவனிடம் பந்தத்திற்கு காரணமான அஞ்ஞானம் நீங்கவே நீங்காது.

அதுப்போல, மந்திர ஜபத்தின் பலனாக சித்த சுத்தி உண்டாகி, தூய்மையான மனதினால், சாஸ்திர விசாரம் செய்து, சாஸ்திரம் கூறுகின்ற சத்தியத்தை அறிந்து, அதனால் பெற்ற ஞானத்தின் வாயிலாக சாகாமல் இருப்பதே சாஸ்வதம் ஆகும்.

இந்த ஞானத்தை அடைவதற்கு தகுதியானவன் (அதிகாரி) இந்த சம்ஸாரத்திலிருந்து விடுதலை அடைய விரும்புகின்றவனே ஆவான்.

ஆம்! அவன் மட்டுமே பிறப்பு - இறப்பு என்ற சம்சாரம் பந்தம் வேண்டாம் என்று மோக்ஷத்தை அடைய விரும்புவான்.

இப்படிப்பட்ட மோக்ஷமே பிரம்ம ஞான சொரூபம் எனவும், இதை அறியாமையே அஞ்ஞானம் என்ற பந்தத்திற்கு காரணம் என்பதை எவன் ஒருவன் அறிகின்றானோ, அவனே இந்த மனித தேகம் கிடைத்ததின் பாக்கியத்தைப் பெற்றவன் ஆகின்றான்.



இதை, சாஸ்திரம் இந்த மனித சரீரத்தை ஒரு ரதத்துடன் (தேர்) ஒப்பிட்டு, ஐம்புலன்களான கண்கள், மூக்கு, வாய், செவிகள் மற்றும் இந்த உடம்பின் மீது இருக்கும் தோல் ஆகிய இவைகளை ஐந்து குதிரை களாகவும், மனதினை குதிரைகளை கட்டுப் படுத்தும் கடிவாளமாகவும், புத்தியே (அறிவு) இந்த ஐந்து குதிரை களைச் சரியாகச் செலுத்தும் சாரதி போன்றும், இந்த ரதத்திற்கு சொந்தக்காரனாக அதில் உட்கார்ந்துக் கொண்டு பயணம் செய்வது, அந்த பரமா(ஆ)த்மா என்பதை எவனொருவன் அறிகின்றானோ அவனே இந்த சரீரத்திற்கு அப்பாற்பட்ட அந்த சைதன்ய சொரூபத்தை அறிய முடியும் என்று உபதேசம் செய்கின்றது.

பொதுவாக, சாஸ்திரத்தின் உண்மைத்தன்மையை அறிந்து கொள்வதோ, அல்லது தொடர் ஜபத்தினால் பாவங்கள் நீங்கப்பெற்று ஆத்மாவைப்பற்றிய அறிவைப் பெற, கிடைத்த வாய்ப்பு தொடந்து நீடிக்கும் என்பது அவ்வளவு உத்திரவாதம் இல்லை.

காரணம், அதையடைய முடியாமல், நம்முடைய பூர்வஜென்ம வாசனைகள், மற்றும் பாவங்கள் பலமாக இருப்பதினால், அவைகளே நமக்குத் தடைகளாக அமைந்துவிடுகின்றன.

# 9. முத்தடைகளும், பிரார்த்தனையும்

அந்த தடைகளை மூன்று விதமாகக் காணலாம்.

1. **ஆத்யாத்மிகம்:** நம்மால் வருகின்ற தடைகள். (உடல்நோய், மனப்பிரச்சனை, நேரமின்மை, சோம்பேறித்தனம், ஆணவம், அக்கரையின்மை போன்றவைகள்)

2. **ஆதிபௌதிகம்:** பிற உயிர்களால் வருகின்ற தடைகள். (உறவினர்கள் மற்றும் நண்பர்களின் விமர்சனங்கள், நம்முடைய குடும்பத்தில் உள்ளவர்களிடம் இதற்கு ஒத்துழைப்பு இல்லாதது, விஷ ஜந்துக்கள் தீண்டியதினால் இதைத் தொடரமுடியாமை போன்றவைகள்)

3. **ஆதிதைவிகம்:** இயற்கை சக்தியினால் வருகின்ற தடைகள். (புயல் மழை, பலத்த காற்றினால் குடியிருப்பு சேதமாதல், இடி, மின்னல் மற்றும் நெருப்பு போன்ற இவைகளினால் பாதிப்பு உண்டாகி, இதைத்தொடர முடியாமல் போகுதல்) இதுபோன்ற பிரச்சனைகளை அனுபவித்து, அடையவேண்டிய இலக்கை அடையமுடியாமல் போகக்கூடாது என்று கருதிய நம்முடைய மஹான்கள், இந்த நல்ல வாய்ப்பை கொடுத்த இறைவனிடம், இதன் மூலமாக அந்த இலக்கை

அடையும்வரை ஒத்துழைப்பு நல்கவேண்டி அவனிடம் பிரார்த்தனை செய்துக் கொண்டனர்.



**பிரார்த்தனைகள்:-**

1. ஆச்சாரியர், சீடர் ஆகிய நம் இருவரையும் இறைவன் காப்பாற்றட்டும். அறிவின் ஆற்றலை நாம் இருவரும் அனுபவிக்குமாறு ஊக்கு விப்பாராக! நாம் இருவரும் ஈடுபாடு மிக்க ஆற்றலுடன் உழைப்போமாக! கற்ற வித்யா (கல்வி) நமக்கு பயனுள்ளதாக அமையட்டும். எதற்காகவும் நாம் ஒருவரை ஒருவர் வெறுக்காமல் இருப்போமாக!



2. என்னுடைய அவயவங்களான கண்கள், காதுகள், வாக்கு, பிராணன் மற்றும் எல்லா புலன்களும் மிகுந்த ஆற்றலுடன் விளங்கட்டும். அப்பொழுதுதான், நான் உறுதியான உடலும், திடமான மனமும் பெற்று சாஸ்திரங்களை கற்க முடியும். உபநிஷதங்கள் கூறுகின்ற இறைவனே எல்லாமாக இருக்கின்றார் என்பதை நான் அறிந்து, அதை மறுக்காதிருப்பேனாக. இறைவன் என்னை மறுக்காதிருப்பாராக. இறைவனிடம் இருந்தும், என்னிடம் இருந்தும் மறுப்புகள் இல்லாது இருக்கட்டும். சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள தர்மங்கள் ஆன்மாவை அறிய விரும்புகின்ற என்னில் குடிகொள்ளட்டும்.

அப்பொழுதுதான், நான் முக்தி, உயர் உலகங்கள், மறுபிறவி, இறைவன், அறிவு போன்ற உயர்ந்த கருத்துக்களை நேரடி யாகவோ, அல்லது அனுமானத்தின் மூல மாகவோ அறிந்துக் கொள்ள முடியாது என்பதை புரிந்துக் கொள்ள ஒரே வழி, சாஸ்திரத்தை தக்க

சத்குருவின் வாயிலாகக் கற்று, அவர்கள் கூறிய உபதேசங்களின் மூலம் விசாரத்தில் ஈடுபடுவதினால் மட்டுமே முடியும் என்ற உண்மை அறிவும், வேதங்கள் கூறுகின்ற விவேகம், வைராக்கியம் போன்ற பண்புகளும் என்னிடத்தில் உண்டாகட்டும். என்று ஜபம் செய்ய தொடங்கும் முன்பு **பிரார்த்தனை** செய்து கொள்ளவும்.

# 10.ஜபத்தின் நோக்கமும், பலனும்

ஆன்மீகப் பாதையில், அனேக சாதனைகளில் ஒன்றாக மந்திர ஜபத்தை முக்கியமாக எடுத்துக் கொள்வதற்குக் காரணம், இங்கு கற்பதுவோ, யாக, யக்ஞங்கள் செய்வதோ, பூசை, புனஸ்காரங்கள் போன்ற வழிபாட்டு முறைகளோ, அஷ்டாங்க யோகம் போன்ற உடற்பயிற்சி முறைகளோ, சடங்கு, சம்பிரதாயங்கள் போன்ற, கர்மானுஷ்டானங்களைப் போன்று, கடினமாக இல்லாமல், சாதகன் தனிமையில் ஒரிடத்தில் அமர்ந்து, மனதினால், அந்த இறை நாமத்தை ஜபம் செய்வது மிக எளிது என்பதினால் ஆகும்.

ஆனால், ஒன்றை மட்டும் இங்கு முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதாவது, இந்த நாம ஜபத்தின் பிரயோசனம் என்ன? என்பதில் தெளிவு இருக்க வேண்டும். எதற்காக இந்த நாம ஜபம் என்று தெரியாமல், செய்கின்ற ஜபத்தினால் பலன் கிடைக்காது.

இந்த பிரயோசனம் இரண்டு வகைப்படும் என்று சாஸ்திரம் விளக்கமளிக்கின்றது.

அவைகள்,

1. **பரமப் பிரயோசனம்**

2. **அவாந்தரப் பிரயோசனம்** என்பதாகும்.

அதாவது, வாழை மரங்களை பயிரிட்டுள்ள விவசாயிக்கு வாழைப்பழம் **பரமப் பிரயோசனம்**. அந்த வாழை மரத்தின் தண்டு, இலை போன்றவைகள் **அவாந்தரப் பிரயோசனம்** எனலாம்.



அதுப்போல, இங்கு நமக்கு “**மோக்ஷம்**” என்பது பரமப் பிரயோசனம் என்றும், “**நாம ஜபம்**” என்பது அவாந்தரப் பிரயோசனம் என்றும் ஒரு தெளிவு இருக்க வேண்டும்.

இல்லாவிட்டால் என்னவாகும் எனில், வாழைப் பழத்தின் அருமை அறியாத ஒருவன் வாழைமரத்தை பயிரிட்டு, அதில் உள்ள பழங்களை புசிக்காமல், தண்டு, இலைகளை பயன்படுத்தி மகிழ்வதற்கு ஒப்பாகும்.

அவ்வாறு, இந்த நாம ஜபத்தை எதற்காகச் செய்கின்றோம் என்ற புரிதல் இல்லாமல் எத்தனை காலம் செய்து வந்தாலும், அதன் பலன் மோக்ஷத்தை அறியவிடாமல், இந்த இறைவனின் நாமம் (பெயர்) அதிக மகத்துவம் வாய்ந்தது, அந்த இறைவனின்

நாமம் சிறிது மகத்துவம் குறைந்தது என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டு, இறைவனின் நாமங்களை மாற்றி, மாற்றி ஜபம் செய்வதிலேயே காலம் கழிந்து விடும்.

உதாரணமாக,

விஷ்ணு பக்தர்கள் "**ஓம் நமோ நாராயணாய**" என்பதுவே உயர்ந்த மந்திரம் என்றும். சிவ பக்தர்கள் "**ஓம் நமசிவாய**" என்ற மந்திரமே மிக உயர்ந்த மந்திரம் என்றும், அம்மனை வழிபடும் பக்தர்கள் "**ஓம் சக்தி**" என்பதுவே உயர்வான மந்திரம் என்றும் கருதுவது போலாகும். நாப ஜபம் என்பது இறைவனை அறிந்துக் கொள்ள பயன்படுத்தப்படுகின்றது.

# 11. குருவும், சாஸ்திரமும்

இறைவனே யார் என்று தெரியாமல், இறைவன் எப்படிப்பட்டவன், எந்த உருவத்தை உடையவன், எந்த பெயருக்கு சொந்தக்காரன் என்று எதுவுமே தெரியாத நிலையில், இறைவனின் நாம, ரூபங்களில் பேதமையை கற்பித்துக் கொண்டு, இவர்களாகவே, இந்த நாமம் மட்டுமே உயர்வான இறை நாமம், இந்த இறைவனின் நாமம் இப்படிப்பலன் கொடுக்கும், அந்த இறைவனின் நாமம் அப்படிப்பலன் கொடுக்கும், என்று கருதி அதனை ஜபம் செய்வது, அதன் உண்மைப்பலனைக் கொடுக்காது. அது, வீணான ஒரு செயலாக மாறிவிடும்.

நாம ஜபம் செய்யும் சாதகனுக்கு, அந்த இறைவனின் மீதும், இறை நாமத்தின் மீதும் சிரத்தை **(நம்பிக்கை)** இருக்க வேண்டும்.

எதன் அடிப்படையில் இந்த நம்பிக்கை வரும் அல்லது வளரும் என்றால், சாஸ்திரமும், சத்குருவும், கொடுக்கின்ற நம்பிக்கை. அதாவது, இறைவனே வேதத்தில் இந்த, இந்த நாமங்கள் என்னுடையது, இந்த, இந்த நாமங்களுக்கு இப்படிப்பட்ட பலன்கள் என்று கூறியுள்ளார்.

அதனால், இந்த நாமத்தை உபாசனை செய்தால், இந்த பலன் உண்டாகும், என்பதை சாஸ்திரத்தை கற்று அறிந்த குரு தெளிவு படுத்தி, அந்த மந்திரத்தை அவர் உபதேசித்து, அதன் வாயிலாக நமக்குக் கிடைத்த நம்பிக்கையில், நாம் அந்த நாம ஜபத்தை விடாமல் கூறுவதினால் பலன் உண்டாகும்.

இதுவும், **அறம், பொருள், இன்பம், வீடு** என்ற புருஷார்த்தங்களில் அடிப்படையில், மனிதன் மனதின் பிடியில் இருந்து விடுதலை பெறக்கூடிய பிறவாப் பெரு நிலையாகிய ‘**வீடுபேறு**’ அளிக்கும் அற்புத நாம ஜபமே, சிறப்பானது ஆகும்.

அதைவிடுத்து, அற்ப பொருட்களில் ஆசைகள் கொண்டு, அதற்கான தேவதைகளான லக்ஷ்மி, குபேரன் போன்ற தேவதைகளை அனுதினமும் ஜபம் செய்து, அதற்குரிய பலனாக பொருள் கிடைத்தாலும், **நித்திய, அநித்திய வஸ்து விவேகம்** இல்லாமல் இருப்பதினால், அவர்கள் செய்த நாம ஜெபத்தால், கிடைத்த அநித்தியமான வஸ்துக்களான பணம், பதவி, கார், பங்களா போன்ற பொருட்களை எல்லாம், அவர்களது உடல் உள்ளவரை அனுபவித்து விட்டு, அரிதான மனித உடலை விட்ட பிறகு, நித்திய வஸ்துவான அந்த இறைவனை அறியாததினால், ஆழ்ந்த இருளில் மூழ்கி, பெரும் துயரத்தை அல்லவா? அனுபவிக்க வேண்டியது வரும்.

மேலும், சில சாதகர்கள் மந்திர ஜபம் செய்து வருகின்ற காலங்களில், தாங்களாகவே மனம் தூய்மை அடைந்து விட்டது போன்று ஒரு பிரமையில் உபாசித்து வந்த இறை நாமம் ஜபிப்பதை நிறுத்திவிடுவர்.

அதற்குக் காரணம்,

“**மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்**”

என்று கூறுவதின் உட்பொருளை ஆராயாமல், மந்திரம் ஜபிப்பதை நிறுத்தி விடுவர்.

பொதுவாக, இறைவனின் ஆயிரக்கணக்கான பெயர்களைக் கொண்ட நாமங்களில், எந்த நாமத்தை வேண்டுமானாலும் ஒரு சாதகன் தேர்ந்தெடுத்து, அதனை ஜபம் செய்யும் பொழுது, அவனது மன அழுக்குகள் அந்த மந்திர ஜபத்தால் நீங்கப் பெற்று, அந்த சாதகனின் மனம் தூய்மை அடையும்.

இத்தகைய இறை நாம ஜபங்கள் சாதகனின் மனதினை செம்மைப்படுத்தி விட்டால், அதன் பிறகு மந்திரம் செபிக்க வேண்டாம் என்பதில் உள்ளார்ந்த சூக்ஷமம் அங்கு பொதிந்துள்ளது.

அதை சாதரணமான ஜனங்கள் மனத்தூய்மை உண்டாகி விட்டால், இனி மந்திரம் ஜபிக்க வேண்டாம் என நினைத்துக் கொள்கின்றனர்.

ஆனால், அதன் உண்மைப் பொருள் சாஸ்திர விசாரத்தினால், விவேகத்தை அடைந்த **தத்துவஞானி** மட்டுமே, தன் மனதை விசாரித்து, **தன்மயமாதல்** என்ற முறையில், தன் உண்மை சொரூபத்தை உணர்ந்தவுடன் மந்திர ஜபத்தை நிறுத்துகிறார்.

ஆக, அறியாமையை நீக்கி, அறிவை அறிய வேண்டுமானால், அவசியம் **சாஸ்திரமும், சத்குருவும்**, தேவை.

நாம, ரூபங்களுக்கு (பெயர்கள், உருவங்கள்) அப்பாற்பட்ட நிர்குண ஸ்வரூபமான பரப் பிரம்மத்தை அறிந்துக் கொள்வது என்பது, சாஸ்திர விசாரத்தினால் அடைந்த விவேகத்தினால் மட்டுமே சாத்தியம் ஆகும்.

அதாவது, பரமா(ஆ)த்மா மட்டுமே நித்தியம், மற்றவைகளெல்லாம் அநித்தியம் என்பதை சாஸ்திரம் கற்கின்ற பொழுதுதான் புரியவரும்.

ஆகவே, பரமா(ஆ)த்மவை அறிவது மட்டுமே **பரமப்பிரயோசனம்.** மற்றவைகள் எல்லாம் ஏற்கனவே கண்டதுப் போன்று, **அவாந்தரப் பிரயோசனம்** ஆகும்.

அதாவது, வாழைப்பழங்கள் மட்டும் வேண்டும் என்றாலும், அதனுடன் சேர்ந்த தண்டு, இலைகள் என எல்லாம் அடங்கிய ஒரு **வாழைமரம்** இருந்தாக வேண்டும்.

அதுவே, எனக்கு தண்டு, இலைகள் எல்லாம் வேண்டாம், வெறும் வாழைப்பழங்கள் மட்டும் போதும் எனக்கருதி, வளர்ந்து வருகின்ற வாழை மரத்தில் உள்ள தண்டுப்பகுதியையும், இலைகளையும் வெட்டி வீழ்த்தி விட்டால், அந்த வாழைமரத்தின் பயனாக கிடைக்கும் வாழைப்பழங்கள் கிடைக்காது அல்லவா?

அதுவே, அந்த வாழைப்பழங்களை பயனாக பெற்றவுடன், அதன் மற்ற பகுதிகளான தண்டும், இலைகளும் அடங்கிய அந்த மொத்த வாழைமரத்தை வெட்டி வீழ்த்திவிடலாம். அதற்குப் பிறகு அவைகள் தேவை இல்லை அல்லவா?

எனவே, வாழைப்பழங்களை பலனாகப் பெற வேண்டுமானால், அதன் தண்டுப்பகுதி, இலைகள் எல்லாம் எப்படி அவசியமோ, அப்படியே ஆத்ம ஞானம் அடைய விரும்பும், சாதகன் ஆரம்பத்தில் நாம ஜபம், மந்திர உபாசனைகள் என எல்லாவற்றையும் மேற்கொள்வது அவசியம்.

ஆகவே, பரப்பிரம்மத்தைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள வேண்டுமானால், அவசியம் சாஸ்திர விசாரமும், சத்குரு சம்பந்தமும், அவரது உபதேச மந்திரமும் உபாசனையாக இருக்க வேண்டும்.

இதன் பலனாக, எல்லையில்லாத பேருணர்வின் பெருமிதம் அவனுக்கு அனுபவமாகிவிட்டால், அதன் பிறகு நாம ஜெபம், கடவுள் சிலைகள், குரு போன்ற எதுவுமே அவசியம் ஆகாது. அதே சமயம், அந்த பலன் முழுமையாக கிடைக்கும் வரை இவைகளை தவிற்கவும் முடியாது.

அவ்வாறே, அந்த பழங்களை (பரப்ரம்மத்தை) பலனாகப் பெறுவதற்கு பதிலாக, அதற்குக் காரணமான தண்டையும், இலைகளையும் (ஜெபம், குரு) மட்டுமே பரமப்பலனாக கருதிக்கொண்டு, அதிலேயே திருப்தியை அடைந்து விட்டானாகில், அவனை அறியாமையில் (அஞ்ஞானியாக) இருப்பவனாகத்தான் கருத வேண்டும்.

# 12. விவேகம், சாதனமும்

இந்த பிரபஞ்சத்தில் அழியக்கூடிய பொருள் எது?, அழியாத பொருள் எது? என்று தத்துவ விசாரத்தினால், பிரித்து அறிவதே **நித்ய, அநித்ய வஸ்து விவேகம்** ஆகும்.

அதாவது, நித்ய வஸ்து **பரம்பொருள்** மட்டுமே என்றும், அது எக்காலத்திலும் அழிவற்றது, மற்ற அநித்ய பொருள்கள் அனைத்தும் ஒரு காலத்தில் அழியக்கூடியது என்பதை அறிவது மட்டுமே "**அறிவு**" (ஞானம்) என்கின்றது சாஸ்திரம்.

அதனால்,

சாதனம் இன்றி ஒன்றைச் சாதிப்பார் உலகில் இல்லை
ஆதலால் இந்த நான்கும் அடைந்தவர்க்கு அறிவு உண்டாகும்
நூதன விவேகி உள்ளம் நுழையாது நுழையும் ஆகில்
பூத ஜென்மங்கள் கோடி புனிதன் ஆம் புருடன் ஆமே

- கைவல்ய நவநீதம்.

என்று சாஸ்திரம் கூறுகின்றதே, இதன் பொருள் என்னவென்று பார்த்தோமானால், அழியக்கூடிய தேகத்தில் உள்ள அழியும் பொருள்களான கண், காது போன்ற புறக்கரணங்களை கொண்டும், மனம் போன்ற அந்தக்கரணங்களை கொண்டும் அந்த அழியாப் பரம்பொருளை அறிந்து கொள்ள முடியாது.

ஆனால், **விவேகம், வைராக்கியம், சட்கசம்பத்து** மற்றும் **முமுக்ஷுத்துவம்** என்ற இந்த நான்கையும்

சாதனங்களாக ஒருவன் அடைந்தான் என்றால், அவனுக்கே அறிவு உண்டாகும். அப்படிப்பட்ட அறிவை அடைந்தவன், பல கோடி ஜென்மங்களில் செய்த புண்ணியத்தின் பலனாக அது கிடைத்திருக்கிறது என்பதை எடுத்துக் கூறுகிறது சாஸ்திரம்.

இதிலிருந்து அறிய வேண்டிய அரிய உண்மை என்னவென்றால், **பூசை, வழிபாடு, யாக, யக்ஞங்கள், யோகம்** போன்ற புறச் சடங்குகளாலும், **தியானம், ஜபம், மந்திர உபாசனை** போன்ற அகச் சடங்குகளாலும் அந்த இறைவனை அறிந்து கொள்ள முடியாது.



பிறகு ஏன்? சாஸ்திரத்தில் அதுப்போன்ற கர்ம அனுஷ்டானங்கள் கூறப்பட்டுள்ளது எனில், அவைகள் அனைத்தும் சாஸ்திரத்தை அறியாத சாதாரண பாமர பக்தனுக்காக கூறப்பட்டுள்ளது.

அதாவது, அதிக ஆசைகளினால் அழுக்காகிய அவனது மனம், தூய்மையான மனமாக மாறி, சித்த சுத்தி அடைய வேண்டுமானால், அவனுக்கு அவசியம் சாஸ்திரமும், சத்குருவும் கிடைத்து, அவனது அறியாமைகள் அகற்றப்பட்டு, அதன்மூலம் அறிவு உண்டாகி, அதன்பிறகு அந்த இறைவ(தன்)னை அறிந்துக் கொள்வதற்காகவே, அனைத்து கர்மங்களும் அவனுக்கு வலியுறுத்தப்படுகிறது.

ந து மாம் ஸக்யஸே த்ரஷ்டுமநேநைவ ஸ்வசக்ஷுஷா |
திவ்யம் ததாமி தே சக்ஷு: பஸ்ய மே யோகமைஸ்வரம் || (11–8)

இதையே கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உன்னுடைய ஊனக் கண்களால் என்னைக் காண இயலாது, என்னுடைய (சாஸ்திர அறிவு - ஞானக்கண்) ஞானக்கண்ணைத் தருகிறேன், அப்பொழுதுதான் நீ என்னைக் காண இயலும் என்று அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறார்.

ஆகவே, இறைவ(தன்)னைக் காண வேதாந்த சாஸ்திர அறிவு அவசியம் வேண்டும். சாஸ்திர அறிவு (ஞானம்) பெற சத்குருநாதர் வேண்டும், சத்குரு நாதர் கிடைக்க, மன அழுக்குகள் நீங்க வேண்டும், மன அழுக்குகள் நீங்க பூசைகள், மந்திர ஜபங்கள், யாக யக்ஞங்கள் செய்யப்பட வேண்டும். இதையெல்லாம் கிரமமாக (முறையாக) கடந்து வந்தால் மட்டுமே மகத்தான அந்த மெய்ப்பொருள் சித்தியாகும்.

இதில், நாம் ஒவ்வொருவரும் தற்பொழுது எந்த இடத்தில் இருக்கின்றோம் என்பதை எளிதாக அறிய மனதை விசாரித்து விடைக் காண முயலுங்கள்.

# 13. மன அழுக்குகளும், நீக்கமும்

நம்மிடையே உலக பந்தங்கள் என்ற ஆசைகள் இருப்பதால், **காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம்** என்ற ஆறு விதமான அழுக்குகள் ஒட்டிக் கொண்டிருக்கின்றன.

அதாவது, **ஆசை, கோபம், கஞ்சத்தனம், மயக்கம், ஆணவம், பொறாமை** போன்ற ஆறு தீயகுணங்களில் சில, சிலரிடம் காணப்படுகின்றன.

இந்த தீய குணங்கள் மிக மோசமான **நரகத்தின் நுழைவு வாயில்** என்று கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகின்றார்.

த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாஸநமாத்மந: |
காம: க்ரோத ஸ்ததா லோப ஸ்தஸ்மாதேதத்ரயம் த்யஜேத் || (16-21).

அதாவது, நோயை உடையவன் எவ்வாறு மருத்துவ மனைக்குள் அவசியம் நுழைந்தே ஆக வேண்டுமோ, அதுப்போல, இந்த கெட்ட குணங்களை உடையவன் நரகத்திற்குள் அவசியம் நுழைந்தே ஆக வேண்டும்.

நாம் நரகத்திற்குள் நுழையாமல், நல்ல கதி அடைய வேண்டுமானால், அவசியம் நம்மிடம் ஒட்டிக் கொண்டுள்ள அழுக்குகளை கழுவ வேண்டும்.

இந்த அழுக்கு எங்கு ஒட்டிக்கொண்டிருக்கின்றது தெரியுமா? நம்மிடம் ஏராளமாக ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களாகவும், அதன் காரணமாக அடைந்த அஹங்காரமாகவும் அவைகள் நம் மண்டையில் ஒட்டிக் கொண்டிருக்கின்றன.

அந்த மண்டையை கழுவினால்தான் இந்த மன அழுக்குகள் போகும்!.

அப்படியானால், அதை சாதாரணத் தண்ணீரில் கழுவினால் போய்விடுமா? என்றால், நிச்சயம் போகாது.

அப்படியானால், எதில் கழுவலாம்?

அதற்கு, அந்த அழுக்கை நீக்கி சுத்தம் செய்யும் சுத்த நீரையும், அதிகப்படியான அழுக்கைப் போக்கும் அதி அற்புத சோப்பையும் அறிய வேண்டும்.

ஆம், அவைகளே, மந்திர ஜெபம், தியானம், பூசைகள், யாக, யக்ஞங்கள், ஆலய வழிபாடுகள், சாதுக்களின் சங்கமங்கள், சத்சங்கங்கள், பிராணாயாமம், யோகம் என எதை வேண்டுமானால் எடுத்துக் கொண்டு, அதில் அந்த இறைவனின் மீது செலுத்தக் கூடிய அனன்ய பக்தி உண்டாக வேண்டும்.

இவைகளெல்லாம் அதிகப்படியான அழுக்கை நீக்கும் அதி அற்புதமான சோப்புகள் என்றாலும், அந்த சோப்பைக் கொண்டு, நீர் விடாமல், உலர்ந்த நிலையில், வர வர என்று தேய்க்காமல், மென்மையாக நீர் விட்டு தேய்க்க, சற்று சுத்த ஜலத்தையும் உபயோகிக்க வேண்டும். அப்பொழுதுதான் அழுக்குகள் முழுமையாக நீங்கும். அதற்கு, அந்த சுத்தமான நீர் எது? என்று அறிந்துக் கொள்ளவும் வேண்டும்.

பெரும்பாலான மக்கள் வெறும் சோப்பை மட்டும் வைத்துக்கொண்டு, சுத்த நீரின்றி, சுகமாக குளிக்கப்பார்கிறார்கள். அந்த சோப்பை அப்படியே உபயோகப்படுத்த முயற்சிக்கிறார்கள்.

அதனால், சோப்பு மட்டும் தலையில் ஒட்டிக் கொள்கின்றது. ஆனால், அந்த தலையில் உள்ள அழுக்குகள் மட்டும் நீங்கியப்பாடில்லை.

அப்படியானால், இதில் எந்த சுத்த நீரையும், ஏகப்பட்ட சோப்புகளில், எந்த நல்ல சோப்பையும் நாம் பயன்படுத்த வேண்டும் என்பதை அறிவதற்காக மட்டுமே நன்மை, தீமைகளைப் பகுத்தறியக்கூடிய பகுத்தறிவு நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதுவே மிகவும் முக்கியம்.

ஒரு நாளாவது இதை யோசித்திருக்கின்றோமா?

உண்மையில் நாம் எதற்காக இதைச் செய்கின்றோம்?.

நம்முடைய உண்மையான நோக்கம் என்ன?

ஒரு சிலர் கூறலாம்…

மன அமைதி பெற!

மகிழ்ச்சியுடன் இருக்க!

பாவங்கள் நீங்க!

இறைவனை அறிய!

பொருளைப் பெற!

அருளைப் பெற!

என்று இப்படிக் கூறிக்கொண்டே போகலாம்.

ஆனால், இதில் எதை அடைய நாம் எப்பொழுதும் ஓடிக் கொண்டிருக்கின்றோமோ, அது நம்மிடத்திலேயே இருக்கின்றது என்ற உண்மையை உணராததினால்தான், அதைத்தேடி வெளியே அங்கும் இங்கும் என அலைந்துக் கொண்டிருக்கிறோம்.

நம்மிடத்திலேயே அழுக்கும் உள்ளது. அதை தூய்மைப்படுத்தும் அற்புத வஸ்துவும் நம்மிடத்திலேயே உள்ளது.

அதாவது, அழுக்கும், அந்த அழுக்கை நீக்கும் சுத்த நீரும் நம்மிடையே உள்ளது. இதைப் பிரித்து அறிய வேண்டிய **விவேகம்** மட்டுமே நம்மிடம் இருக்க வேண்டியது மிக முக்கியம்.

நம்மிடத்தில் உள்ள நல்லது, கெட்டதை பிரித்து அறிய என்ன தேவை?

ஏன் நம்மிடத்தில் இருப்பதை நம்மால் அறிய முடியவில்லை?

இங்குதான் நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்...

# 14.ஆறாவது அறிவின் அவசியம்

ஆம்! எந்த ஜீவர்களுக்கும் கிடைக்காத மிகப்பெரிய பொக்கிஷம் நம்மிடம் உள்ளது என்றால், அது ஆறாம் அறிவாகிய அந்த “**பகுத்தறிவு**” மட்டுமே. அதை அடைந்த இந்த மனிதப் பிறவி, அரிதான பிறவி என்று பெரியவர்கள் கூறுகிறார்கள். அதனால், அந்த அரிதான மானிடப் பிறவியைக் கொண்டு, மகத்தான அந்த அறிவை அறிபவனே அறிஞர் (ஞானி) என்று போற்றப்படுகிறார்.

ஆனால், அந்த பகுத்தறிவை பயன்படுத்துவது எப்படி? என்று மட்டும் எல்லோருக்கும் தெரிவதில்லை. அதாவது, ஒரு அறிவு தாவரம் முதல், ஆறு அறிவு மனிதன் வரை அடைந்த பரிணாம வளர்ச்சியின் பயன் பெரும்பாலானவர்களுக்கு புரிவதில்லை.

என்னற்ற பிறவிகளாக 84 இலட்ச யோனிகளில் பிறவி எடுத்த நாம், இந்த அரிதான மனித உடல் கிடைத்தும், அதை சரியாகப் பயன் படுத்த தெரியாமல் இருக்கிறோம். அதுவும், மற்ற ஐந்து அறிவுக்குட்பட்ட அற்ப சீவர்களைப் போன்றே அனுதினமும் உண்பதும், உறங்குவதுமாக காலத்தைக் கழிக்கிறோம்.

ஆகவே, அரிதான இந்த மனித உடலை பராமரிக்கக் கருதி, அதில் உள்ள அழுக்குகளை நீக்கவேண்டி, அனேக பயிற்சி முறைகள் அடங்கிய அத்தனை சோப்புகளை மாற்றி, மாற்றி, இந்த உடலில் தேய்த்துக் குளிக்க வேண்டுமானால், அதற்கு, **ஆறாவது**

**அறிவு** ஆகிய, அதியற்புத ஆற்றுநீர் அவசியம் ஆகிறது. அதுவே சுத்த ஜலம் (நீர்) எனப்படுகிறது.

ஆக, அந்த “**ஆறாவது அறிவு”** என்ற சுத்தமான ஆறு! நம்மிடமே உள்ளது. அந்த ஆற்றில் குளித்தால் மட்டுமே, நம் அனைத்து அழுக்குகளும் அவசியம் நீங்கிவிடும்.

அதை அறிவதுதான் அதே அறிவு!

அது நம்மிடையே உள்ள அறிவு!

நம்மை நாம் அறியும் அறிவு!

நம்மை நாம் அறிந்தபின், அனைத்தையும் அறிந்த அறிவு!

அனைத்தையும் அறிந்த அறிவே, அந்தப் பேரறிவு!

அந்தப்பேரறிவே நான்!

ஆக, “**எதை அறிந்து கொண்டால், வேறு எதையும் அறியத் தேவையில்லையோ, அதை அறிவதே அறிவு**!” என்கின்றது சாஸ்திரம்.

இதையே, திருமூலரும் தமது திருமந்திர பாடலில், பின்வருமாறு பாடுகிறார்.

“எல்லாம் அறியும் அறிவுதனை விட்டு
எல்லாம் அறிந்தும் லாபம் இங்கில்லை
எல்லாம் அறியும் அறிவை நானென்னில்
எல்லாம் அறிந்த இறை எனலாமே”.

அதையே, பகவான் ரமணமகரிஷி பின்வருமாறு கூறுகிறார்.

அறியாமை விட்டு அறிவு இன்றாம் அறிவு விட்டு
அவ் அறியாமை இன்று ஆகும் அந்த - அறிவும்
அறியாமையும் ஆர்க்கு என்று அம் முதலாம்
தன்னை அறியும் அறிவே அறிவு.

அவரது, இந்தப் பாட்டில் கூறப்பட்ட அறிவும் அறியாமையும் இரட்டைகள்.

ஒன்றைவிட்டு ஒன்று தனித்து இருக்காது. அதாவது, ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றது.

ஆகவே, இரட்டைகளில் **அறிவு - அறியாமை** என்ற இந்த இரட்டைதான் முக்கியமாக ஆராய்ந்து அறியப்பட வேண்டிய அவசியமான ஒன்றாகும்.

இங்கே கூறப்பட்ட **அறிவு - அறியாமை** என்பவைகள், உலக இயல்பைப் பற்றி நமக்கு ஏற்படும் **மெய், பொய்** தோற்றங்களைப் பற்றிய அறிவேயாகும்.

**இந்த இரட்டைகள் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாதது மட்டுமின்றி, ஒன்று தோன்றும்போது மற்றொன்று தோன்றாது.**

அதாவது, இருட்டை உணரும்போது, அங்கு வெளிச்சம் இருக்காது. அவ்வாறே வெளிச்சம் தெரியும் போது இருளை உணர முடியாது.

அதனால், ஒன்றைத் தெரிகிறது என்ற **அறிவு** இருக்கும்போது, மற்றொன்றைத் தெரியவில்லை என்ற **அறியாமையும்** கூடவே இருக்கும்.

அறிவில், அறியாமை கலந்திருக்கிறது.

அறியாமையில், அறிவு கலந்திருக்கிறது.

அறியாமையில், அறிவுக்கலப்பு இல்லை என்றால், தெரியவில்லை! என்று (கூடச்) சொல்ல முடியாது.

ஜடம்போல்தான் இருக்க வேண்டியதாகிவிடும்.

ஆகவே, இந்தக் இரட்டைகள் கலப்பினால், அது தூய்மையற்றுப் போயிற்று. தூய்மையற்றதை அறிவென்று கூறமுடியாது.

அதனால், அறிவு என்பதும், அறியவில்லை என்பதும் ஆகிய இரண்டும் அறியாமைகளே.

ஆக, இந்த ஏற்றி வைக்கப்பட்ட அறிவிற்கும், அறியாமைக்கும் முக்கியக் காரணம் அகந்தை என்ற ஆணவம்.

இந்த அறிவும், அறியாமையும் யாருக்கு என்றால் ***"எனக்கு"*** என்று பதில் வரும்.

அப்படி, எனக்கு என்று சொல்பவனை **"யார்?"** என்று தீர விசாரித்து, அறிய முற்பட்டால், அதன் உதிப்புக்குக் காரணமாகிய **அகந்தையை** அறிய முடியும்,

அந்த அகந்தையை அறிவது என்பது, அப்படி ஒன்று தன்னிடத்தில் இல்லவே இல்லை என்பதை அறிபவன் எவனோ? அவனே அறிவான்.

ஆம்!, அவனே தன்னை யார் என்று அறிந்துக் கொண்ட ஞானத்தினால், அகந்தை அற்று ஆனந்தமாக இருப்பான்.

அகந்தை அழிந்த இடத்தில் அவனது உண்மை அறிவுச் சொரூபம் பொலிவுடன் பிரகாசிக்கின்றது.

அப்படியதை உணர்கின்ற உணர்வுதான் உண்மை அறிவு.

ஆக '**இருப்பது அது மட்டுமே. அதை விடுத்து, அதற்கு வேறாக அறிவதற்கு ஒன்றுமில்லை!**' என்ற இந்த அறிவை அடைந்தவனுக்கு, இனி அடைவதற்கு ஒன்றும் இல்லை.

ஆனால், அறியாமை கொண்ட மனிதனோ, தனது ஐம்புலன்களினால் இந்த உலகப் பொருட்களை அறிவதையே "**அறிவு**" என்று நினைக்கிறான்.

அந்த அறிவும், அதற்கு அயலான அறியா மையும், ஆகிய இரண்டுமே தோன்றுவதற்குக் காரணம் தனக்கு "**அறிவு**" என்று ஒன்று இருப்பதினால்தான் என்பதை அறிய மறுக்கின்றான்.

அதாவது, "**நான் யார்?**" என்று, தன்னைப் பற்றி அறிய முடியாத அறியாமை, தன்னிடம் இருக்கிறது என்பதை அறிவதே ஒரு அறிவுதான் என்பதையும் அறிய மறுக்கிறான்.

அதாவது, அந்த **அறிவு** தன்னை விட்டு, தனக்கு வேறான இந்த உலகையும், உலகப்பொருட்களையும் அறிவதிலேயே அதிக நாட்டம் கொள்வது ஏன்? என்று சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அறியும் நானா? அல்லது அறியப்படும் இந்த உலகமா?

இரண்டில் எது முதன்மையானது?

அனைத்தையும் அறியும் அறிவாகிய தன்னை விட்டு, விட்டு தனக்கு வேறான இந்த உலகையும், உலக விவகாரங்களையும் அறிவது, அறியாமையினால் அல்லவா?

தனக்கு வேறாக உள்ள அன்னியப் பொருட்களை அறியும் அது மெய்யறிவாகிய உண்மை அறிவு ஆகாது.

அதாவது, தான் ஒன்றை அறிவதற்கோ, தன்னை அறிவிப்பதற்கோ, தனக்கு அன்னியமாக வேறொரு பொருள் இல்லாமல், தானே சுயமாக பிரகாசிப்பதால், தன்னில் தானாகிய ஆன்மாவே உண்மை “**அறிவு**” என்று அறிவதே “**ஆத்ம ஞானம்**” எனப்படும்.

இதையே கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகின்றார்.

அநந்யாஸ்சிந்தயந்தோ மாம் யே ஜநா: பர்யுபாஸதே |
தேஷாம் நித்யாபியுக்தாநாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம் ||
(9–22)

*“எனக்கு அன்னியர் அல்லாராய் என்னையே நினைத்து யாண்டும் என்னையே உபாசிக்கும் நித்திய யோகிகளுடைய யோகச் க்ஷேமத்தை நான் வழங்குகிறேன்”* (9-22)

என்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுவதற்கும், இங்கு கூறப்பட்டுள்ளதற்கும் என்ன வித்தியாசம் உள்ளது?

பக்தன் இறைவனை தான் வேறு, அவன் வேறு என்று துவைத பேதத்தில் (இருமையாக) வழிபட்டான் என்றால், இறைவனுக்கு வேறாக பக்தனாகிய இவனைப் போன்றே இன்னும் பலவும் இருக்கிறது என்றாகிவிடும்.

அப்படிப்பார்க்கின்ற பொழுது இவன் (பக்தன்) இறைவனுக்கு வேறாக இருப்பதுப் போலவே, இன்னும் அநேக வஸ்துக்கள் இருக்கக்கூடுமானால், அவைகளில் ஏதேனும் ஒன்று, ஒரு நாள் இறைவனையே மிஞ்சக் கூடிய சக்தியை அடைந்தாலும் ஆச்சரியம் இல்லை அல்லவா?

அப்படி, இறைவனுக்கு வேறாக ஒரு சக்தி இருக்குமானால், அந்த ஏக இறைவனை, “**இறைவன்**” என்று போற்றி அழைக்க முடியுமா? அதற்கு அவசியம் இல்லாமல் போகக்கூடிய ஒரு நிலை உருவாகிவிடும் அல்லவா?.

இதனைத்தான், பகவான் ஸ்ரீகிருஷ்ணர் “**எனக்கு அன்னியர் அல்லாராய் என்னையே**” என்று கூறியிருப்பது கவனிக்கத்தக்கது ஆகும்.

இங்கு கூறப்படும் கூற்று, அந்த இறைவனுக்கு அன்னியமாக வேறு ஏதும் இல்லாமல், தன்னுள்ளே எல்லாமாய் இருப்பது என்பதாக கீதை உபதேசிக்கிறது.

அவ்வாறு இருந்தால் மட்டுமே, **ஆத்ம சாதகனுக்குத்** ‘தன்னுள் ஒளிறும் ஆன்மாவே’ “**நான்**” என்ற அறிவும், அந்த **பரமா(ஆ)ன்மா** தவிர வேறு எதுவுமே இல்லை என்ற தெளிவும் உண்டாகும்.

இதை அனைத்தையும் அறிகின்ற அறிவாகவும் அந்த பேரறிவே இருக்கின்றது என்பதுவும் புலனாகும்.



இதையே திருமூலரும்,

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தன பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தன பார்முதல் பூதமே. - திருமந்திரம்.

மரத்தால் செய்யப்பட்ட மிகப் பெரிய **மதயானை** உருவம் சிற்பியின் கைவண்ணத்தால் செதுக்கப் பட்டவுடன், பார்வைக்கு அந்த மரத்தை மறைத்து உண்மையான யானை போன்றே தோற்றத்தில் மக்களை மயக்குகின்றது.

அதுவே, அறிவினால் ஆழ்ந்து நோக்கினால், சிற்பியினது வேலைப்பாடுகளை மீறி, அது மரத்தால் செய்யப்பட்ட பொம்மை என்று அறிய முடிகின்றது.

அதுப்போல, கற்பனையாகத் தோன்றும், இந்த உலகம் நம்முடைய அறியாமையினால், பரம்பொருளை மறைத்து பார்வைக்கு உண்மை போலத் தோற்றமளித்து மக்களை மயக்குகின்றது.

அதுவே, குருவருளால் ஞானத்தைப் பெற்று ஆழ்ந்து நோக்கினால், நம்முடைய அறியாமை நீங்கி, அந்த பரம்பொருளைத் தவிர, உண்மையில் இந்த உலகம் என்று ஒன்று இல்லவே இல்லை என்பது புரிகின்றது.

இதிலிருந்து, எனக்கு வேறாக ஒன்று இருந்தால் தானே அதனை நான் ஜெபம் செய்ய முடியும், பூசை செய்ய முடியும், யாக, யக்ஞங்கள் செய்ய முடியும். அத்துடன் **குரு - சிஷ்யன்** என்று கருத முடியும்.

ஆகவே, இனி அறியாமையினால் அலைந்து திரிந்து தேடியதை, அடைந்த அறிவினால் அப்படியே நிறுத்திக்கொள்ள முடியும்.

# 15. இருப்பது ஒன்றே!

இருப்பது ஒன்று மட்டுமே, அதுவே சத்தியம், நித்தியம், நிர்குணம், நிர்மலம், நிராகாரம், நிரஞ்சனம், பரப்பிரம்மம், பரிபூரணம் என்று இப்படி கூறிக் கொண்டே இருக்கலாம். இந்த நாமங்கள் அனைத்துமே, நாம் அந்த இருப்பை அறிந்து கொள்வதற்காக அறிவிக்கின்ற வார்த்தை ஜாலங்கள்.

ஆனால், அந்த வஸ்துவோ உருவமோ, பெயரோ, குணமோ, மனமோ, மலமோ, திடமோ எதுவும் இல்லாத ஒன்றாக இருக்கின்ற பொழுது, அதனை "**நிர்குண பிரம்மம்**" என்று அழைக்கப் படுகின்றது.


நாமம், ரூபம், படைத்தல், காத்தல், அழித்தல், என்ற முத்தொழிகளை புரியும் செயலைச் செய்ய குணங்களுடன் இருக்கின்ற பொழுது அதனை "**சகுண பிரம்மம்**" என்று அழைக்கப்படுகின்றது.



இவ்வாறு, நிர்குண பிரம்மம், சகுண பிரம்மம் என்று பிரம்மத்தை இரு நிலைகளாக பிரித்துப் பார்ப்பதற்கு அவசியம் இருக்கின்றது.

இருப்பது தங்கம் என்ற ஒன்று மட்டுமே. அதை வளையல், மோதிரம், கம்மல் என்று பெயரைக் கொடுத்து, வடிவத்தை மாற்றிக் கொடுத்தவுடன் அதற்கு மதிப்பு கூடி விடுகின்றது. அதன் பிறகு அது அனைவரின் பயன்பாட்டிற்கும் விரும்பப்படுகின்றது.

அதுபோல, இருப்பது, பிரம்மம் (தங்கம்) ஒன்று மட்டுமே, அதனை குணங்களுடன் மாற்றி செயல் செய்ய வைக்கப்படும் பொழுது, அது படைத்தல், காத்தல், அழித்தல் (வளையல், மோதிரம் கம்மல் போன்று பெயர், உருவம் கொடுக்கப்பட்டு) என்ற மாற்றத்திற்கு உட்படுத்தப்படும் பொழுது, இந்த உலகம் இயங்குகின்றது.



அந்த பிரம்மம் எல்லா உயிர்களினுள்ளும் ஊடுறுவி, பரவி வியாபித்து உள்ளதாலும், அதற்கு மேல் வேறொன்றும் இல்லாததாலும், அதுவே, பலப் பெயர்களிலும், உருவத்திலும் உணர்வாக ஒளிர்கிறது.

உலகத்தில் உள்ள பொருட்களைப் பார்த்து, அவைகளை உணரச் செய்வதற்கு ஒருவன் தேவை.

அப்படிப்பட்ட அவன் இருப்பதற்கு முழுமுதற் காரணமே பிரம்மம் (அறிவு) என்பதால், பிரம்மத்தின் உதவியால், அவன் பார்க்கப்படும் மற்றப் பொருட்கள் அனைத்திலும் பிரம்மம் இருப்பதினால் மட்டுமே அவைகளை அவனால் அறிய முடிகின்றது. இதிலிருந்து, பிரம்மம் (அறிவு) மட்டுமே பிரம்மத்தை (அறிவை) அறிய முடியும்.

ஆனால், பிரம்மத்தைப் பொறுத்தவரை நாமமும், ரூபமும் மாயை எனப்படுகின்றன.

தங்கம் என்ற மூலப் பொருள் இருந்தால்தான் அதற்குச் செய்யவேண்டிய முறையில் எல்லாம் செய்து, ஒரு உருவமும் கொடுத்து ஒரு பெயரும் கொடுக்க முடிகிறது.



தங்கத்தை உருக்கி வளைத்து கைகளில் அணிவதுபோல் அமைத்து அதற்கு **வளையல்** என்ற பெயரும், மெலிதாக நீட்டி வெவ்வேறு மணிகள் கோர்த்தது போல் செய்து அதற்கு **சங்கிலி** என்ற பெயரும் கொடுக்க முடிகிறது.

இதிலிருந்து, தங்கம் இருப்பதினால் மட்டுமே தங்கத்தை மற்ற வடிவங்களிலும், பெயர்களிலும் அறிய முடிகின்றது.

தங்கமே இல்லையென்றால் அந்த உருவமும், பெயரும் எப்படி இருக்க முடியாதோ அது போல ஒருவன் இல்லை என்றால் பார்ப்பதற்கோ, அனுபவிப்பதற்கோ உலகமும் இல்லை, அதில் உள்ள பொருட்களும் இல்லை.

அந்த ஒருவன் இருப்பதற்கு மூல காரணமாய் இருப்பது பிரம்மம் என்றால், அந்தப் பிரம்மம் இல்லாதபோது உலகம் இல்லை என்றாகிறது. அதனால் பிரம்மம் சத்யம், பார்க்கப்படும் இந்த உலகம் மித்யா (மாயை) என்று கூறப்படுகிறது.

இந்த அறிவைக் கொடுக்கத்தான் சாஸ்திரமும், சத்குருவும் தேவைப்படுகிறது.

இதை அறிந்த நம் பாரதத்தில் தோன்றிய ரிஷிகள் அடைய முடியாத இந்த மனிதப் பிறவியை அடைந்தும், மற்ற எந்த ஜீவர்களுக்கும் கிடைக்காத அறிவு கிடைத்தும், அதைப் பயன் படுத்தத் தெரியாத அறியாமையை எண்ணி, மனம் நொந்த மஹான்கள், இந்த ஜீவர்களை கடைத்தேற்ற கொடுத்தவைகளே

இந்த வேத சாஸ்திரங்கள். இதை உபதேசித்த பல ஆச்சாரியர்களே குருமார்கள்.

இவ்வாறு, தன்னை தன்னில் தானாய் அறிய விரும்பும் முமுக்ஷுவுக்கு சத்குருவின் சந்நிதியில் சரணடைந்ததின் பலனாக, சாஸ்திர விசாரம் உண்டாகி, சாஸ்திரத்தின் வாயிலாக **சிரவண, மனன, நிதித்யாஸனம்** கைக்கூடி, ஆத்மஞானம் கிடைக்கப்பெற்று, பிறவாப் பெருநிலையாகிய மோக்ஷத்தை அறிகின்றான்.

இந்த மோக்ஷம் என்பது எங்கோ இந்த பூமிக்கு தொலைவில் இருக்கும் சொர்க்கலோகம் போன்ற ஒரு புதிய உலகம் என்றும், அதை அடைய வேண்டும், அங்கே சென்று ஆனந்தத்தை அனுபவிக்கவேண்டும் என்றும், ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களின் பிடியில் சிக்கிய மனிதன் இதுப்போன்ற சிந்தனைகளினால் சிறிய எல்லைக்குள்ளேயே, அந்த அகண்டத்தை அறியாமல் தன் வாழ்வை முடித்துக் கொள்கிறான்.

உண்மையில், மோக்ஷம் என்பது விடுதலை என்பதினால், மனிதன் தன் மனதை தானே விசாரித்து, விவேகத்தை அடைந்து, அதன் வாயிலாக தன் உண்மை சொரூபத்தை அறிந்து, அதில் ஆனந்தத்தை உணர்ந்து, உடல் இருக்கும்வரை இந்த பூமியில் இருந்துவிட்டு, அதன்பிறகு, அந்த அகண்ட அறிவுடன் இரண்டறக் கலத்தல் என்பதே ஆகும்.

இந்த உண்மையை உணர்ந்தவனே உத்தமன் என்பதைத்தான் அவ்வை பாட்டியும் தமது பாடலில்,

‘**உடம்பை பெற்ற பயனாவதெல்லாம்**

**உடம்பினுள் உத்தமனைக் காண்**!’ என்று கூறுகிறார்.

இப்படி சத்தியத்தைக் கூற வருகின்ற சாஸ்திரம் அறியாமல், அதற்கான சத்குருவின் அவசியமும் புரியாமல், ஒருவன் எனக்கே எல்லாம் தெரியும் என்று ஆணவத்தில் அனைத்தையும் அறிய முயன்றால், அதைவிட விபரீதம் வேறெதுவும் இல்லை.

ஆம்! காரணம்,

**தத்ஏஜதி தன்னைஜதி தத்தூரே தத்வந்திகே |**
**ததந்தரஸ்ய ஸர்வஸ்ய தது ஸர்வஸ்யாஸ்ய பாஹ்யத: (5)**

ஈசாவாஸ்ய உபநிஷதம் ஸ்லோகம் கூறுகின்றது.

இந்த பிரபஞ்சத்தின் அனைத்து இயக்கங் களுக்கும் ஆதாரமாக இருப்பது ஆன்மா என்பதினால் அது அசைகின்றது. அதுவே, எங்கும் நீக்கமற நிறைந்த நிலையில் உள்ளதால் அதற்கு அசைவில்லை. அது மிக அருகில் உள்ளது. அது அனைத்தின் உள்ளும், வெளியிலும் உள்ளது.

என்ன இது? ஆன்மா அசைகிறது, மிக அருகில் உள்ளது என்று ஒரு இடத்தில் கூறுகிறது, மற்றொரு இடத்தில் ஆன்மாவிற்கு அசைவில்லை, அது தூரத்தில் உள்ளது என்று கூறுகிறது. அடுத்து, உள்ளும் உள்ளது, வெளியிலும் உள்ளது என்று கூறுவதில் இருந்து, இதில் எதை நம்புவது? போன்ற குழப்பங்கள் உண்டாகிவிடும்.

சாஸ்திரம் இவ்வாறு ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களை கூறுகிறதே என்ற சந்தேகம் வந்துவிடும்.

ஆகவே, இதை தக்க சத்குருவின் சந்நிதியில், அவரது நேரடி வழிகாட்டுதலின் படி படிக்கின்றவர்கள் இதுப்போன்ற சாஸ்திரம் கூறவருகின்ற விசயங்களில் குழப்பத்தை அடையாமல், அதற்கான அற்புதமான விளக்கத்தை விளங்கிக் கொள்வார்கள்.



ஆகவே, அதற்கான விளக்கம் என்னவெனில், சாஸ்திரத்தை அறியாத, தத்துவ விசாரத்தில் ஈடுபடாத சாதாரண பாமர பக்தர்களுக்கு பரமன் என்பவன் குணங்களுடன் கூடிய **சகுண பிரம்மம்** என்பதாக மாறி, **பிரம்மா, விஷ்ணு, மஹேஸ்வரன்** என **படைத்தல், காத்தல், அழித்தல்** என்ற மூன்று தொழில்களை புரிகின்றவர்கள் என்பதினால், அவர்கள் அசைவிற்கு ஆதாரமான ஈஸ்வரனாக இருக்கிறார்கள் என்று அறிய வேண்டும்.

அதுவே, சாஸ்திர விசாரம் செய்து தன்னை அறிந்த தத்துவ ஞானிகளுக்கு அதே பரமன் தனித்த, உருவமற்ற, குணங்களற்ற **நிர்குண பிரம்மம்** என்பதால், எல்லையில்லா தனது வைபவத்தினால், எங்கும், எதிலும் நீக்கமற நிறைந்திருப்பதினால், அசைவற்ற நிலையில் இருக்கிறார் என்பதாக அறிய வேண்டும்.

அந்த நிர்குண வடிவாகிய பரப்பிரம்மம் எல்லையற்ற வெட்டவெளி நிலையில் எங்கும், எதிலும் வியாபித்துள்ளதால், அது அனைவரின் உள்ளேயும் சிதாகாசமாகவும், அகண்ட வெளியில் பராகாசமாகவும் பரவி இருக்கிறது என்பதைத்தான் அது உள்ளும் உள்ளது, வெளியிலும் உள்ளது என்று கூறப்படுகிறது.

# 16. பிரம்மமும், பிரம்மஞானிகளும்

அதுப் போலவே, வேதாந்த சாஸ்திரம், வேத மந்திரம், உபாசனா மந்திரம் போன்ற அனைத்தும் தக்க குருநாதரின் வழிகாட்டுதலுடன் கற்று அதை பயன் படுத்த வேண்டும்.

கர்ம காரியங்களில் (பூசை, யாக யக்ஞுங்கள்) உபயோகப்படுத்துகின்ற மந்திரங்களில் உச்சரிப்பு பிழை உண்டாகி விட்டால், அந்த மந்திரத்தின் அர்த்தம் அனர்தமாகிவிடும்.

அதனால், அந்த பூசையின் பலன் நல்லவிதமாக அமைந்து, அதை செய்பவருக்கு புண்ணிய பலன் கொடுப்பதற்கு பதிலாக, பாவப் பலனைக் கொடுத்து விடும்.

அதுபோலவே, குருவின் வழிகாட்டுதல்கள் இன்றி தானாகவே சாஸ்திரப் புத்தகங்கள், உபநிஷதப் புத்தகங்கள் போன்றவற்றைப் படிப்பது, ஆரம்ப சாதகனுக்கு அதை புரிந்து கொள்வதற்குப் பதிலாக, குழப்பத்தைக் கொடுத்து விடலாம்.

எனவே, எதையும் நன்கு அறிந்த தக்க ஸ்தோத்திரன், பிரம்மநிஷ்டன் (பிரம்மநிஷ்டன் - தன்னை பிரம்மமாக அறிந்து கொண்ட குரு) ஆகிய குருவின் வழிகாட்டுதலுடன் செயற்படுத்துவது நன்மை பயக்கும்.

நான் வேறு, இறைவன் வேறு என்று உபதேசிக்கின்ற குரு துவைத மன நிலையில் உள்ளதால், அவரால், பரப்பிரம்ம தத்துவத்தை பாமர ஜனங்களுக்கு புரிய வைக்க முடியாது.

இதில் பாமர பக்தர்கள் என்பவர்கள் தள்ளத்தக்க விசய சுகங்களை தள்ளாமல், சாஸ்திர விசாரணை இல்லாமல், கர்மங்களை செய்துக்கொண்டு, ஈஸ்வரனை எதேனும் ஒரு உருவத்தில் வடித்து, அதற்கு நாம ரூபங்கள் கொடுத்து வழிபாடு செய்கின்றவன் ஆவான். இந்த பக்தனுக்கு அதே இறைவன் பஹிர்யாமியாக எங்கோ வெகு தூரத்தில் இருக்கின்றான்.

அதுவே, சிரவண, மனன நிதித்யாசங்கள் (கேட்டல், சிந்தித்தல், தெளிதல்) செய்யும் பிரம்ம ஞானிகளுக்கு அதே இறைவன் அந்தர்யாமியாக அவனுள்ளேயே மிக அருகில் இருக்கின்றான்.

ஆகவே, அந்தப் பரப்பிரம்மம் சகல ஜிவராசிகளின் உள்ளே மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்ற அந்தக்கரணங்களுக்கு சாட்சியாக தனித்த ஞான சொரூபமாக, ஆத்மாவாக இந்த மாயா பிரபஞ்சத்திற்கு உள்ளும், புறமும் என வியாபித் திருக்கின்றான்.

அப்படிப்பட்ட இறைவன் சுருதியில் வாக்ய ரீதியாக கூறுகின்றான்

**“தஸ்மாத் ஸாகார மநித்யம் நித்யம் நிராகாரமிதி.”**

(மஹா நாராயணோபநிஷதம்).

பரப்பிரம்மமாகிய என்னை நாம, ரூபங்களில் (பெயர், விக்கிரகம்) வழிபட விரும்பி, என்னுடைய நாமங்களை ராமா, கிருஷ்ணா, கோவிந்தா, கேசவா, மாதவா, மதுசூதனா, புண்டரீகா, பக்தவச்சலா, பரந்தாமா, ஈஸ்வரா, சிவா, விநாயகா, சுப்ரமணியா, பார்வதி, பராசக்தி, லக்ஷ்மி, சரஸ்வதி என்று இன்னும் அனேக பெயர்களும், வடிவங்களும் படைத்து வழிபட்டாலும், இந்த அனைத்து பெயர்களும், விக்கிரகங்களும் பிரளய காலத்தில் முற்றிலும் அழிந்துவிடும்.

ஆனால், பெயர்களும், ரூபமும் இல்லாத என் வெட்டவெளி நித்தியமாகவும், சத்தியமாகவும் எக் காலத்திலும் இருக்கும்.

இதுவே என் யதார்த்தமான நிர்குண சொரூபம் ஆகும்.

அதாவது, முதல், இடை, கடை இல்லாதவனும், கை, கால், உடல் என அவயங்கள் இல்லாதவனும், பெயர், கோத்திரம், சூத்திரம், ஜாதி, வர்ணபேதம் இல்லாதவனும், ஆண், பெண், அலி என்னும் விகாரங்கள் இல்லாதவனும், ஜனன, மரண, புண்ணிய, பாவங்கள் இல்லாதவனும் ஆகிய என்னை இந்த அழியக்கூடிய புலன்களால் அறிய முயற்சிப்பது, அறியாமையின்றி வேறு என்னவாக இருக்கும் என்று கேட்கின்றார்.

ஆகவே, அப்படிப்பட்ட பரப்பிரம்ம தத்துவத்தை அறிந்த ஞானிகளும் அந்த இறைவனிடம் வேண்டுகின்றார்கள்.

**ஐயனே!**

உருவமற்ற உங்களை எவ்விதம் அறிவேன், எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இருக்கின்ற உமக்கு அமருகின்ற ஆஸனம் எப்படி கொடுப்பேன்.

சகஜ சுபாவங்களை உடைய உமக்கு ஹர்க்ய பாத்தியங்கள் (இரண்டு கைகளினாலும் நீர் எடுத்து விடுதல்) எவ்விதமாய் விடுவேன்.

எல்லாவற்றையும் பரிசுத்தம் செய்யும் உமக்கு ஆசமனம் எவ்விதம் செய்வேன்.

கலங்கமில்லாமல், பரிசுத்தமாக பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற உமக்கு இங்கு இருக்கின்ற நீரினால் எப்படி குளிப்பாட்டுவேன்.

பிரபஞ்சத்திற்கு எல்லாமாக அதீதமாகவும், அதி சூக்ஷுமமாகவும் எங்கும் பரவிக்கிடக்கின்ற உமக்கு தகுந்த வஸ்திரத்தை எங்கிருந்து கொண்டு வந்து, எவ்விதமாக உடுத்துவேன்.

குலம், கோத்திரம் இல்லாத உமக்கு யக்ஞோப வீதமென்னும் பூணூலை எவ்விதமாய் தரிப்பேன்.

அங்கங்களைக் கொண்ட உடலே இல்லாத உமக்கு அலங்காரம் எப்படி செய்வேன்.

உருவமற்ற உம்மை எந்த உருவத்திற்கு உண்டான பூசைகளை செய்வேன்.

சூரிய, சந்திரர்களையே பிரகாசிக்கச் செய்யும் உம்முடைய ஒளியின் முன்னாலே நான் எந்த தீபத்தை ஏற்றுவேன்.

சர்வ பரிபூர்ணமான நித்திய திருப்தியை உடைய உமக்கு சொற்பமான எந்த நெய்வேத்தியத்தை கொடுப்பேன்.

மனோ, வாக்குக்கு அப்பாற்பட்ட உம்மை எந்த மந்திரத்தைக் கூறி உபாசனை செய்வேன்?.



# 17. தேகமும், தேகியும்

நாம, ரூபங்களுக்கு அப்பாற்பட்ட பரப் பிரம்மத்தை இனி, எந்த மந்திரத்தைக் கூறி ஜபம் செய்ய முடியும்?

முடியும்!

ஆச்சரியமாக இருக்கின்றதா?

ஆம்!

எது, இறைவனது மூச்சுக்காற்றாக, அவனது உள்ளும், புறமும், பரவி அவனை பரவசத்தில் வைத்திருக்கின்றதோ, அதே அவனது மூச்சு, மற்ற அனைத்து ஜீவர்களின் சரிரங்களுக்கும் ஆதாரமாக உள்ளும், புறமும் இயங்கிக்கொண்டிருக்கின்றது.

அவ்வாறு இயங்கிக் கொண்டிருக்கின்ற அந்த மூச்சுக்காற்று ஒரு லயத்தில் உள்ளும், புறமும் சென்று, வந்து இயங்கிக் கொண்டிருக்கின்றது.

அப்படி உள்ளே சென்று விட்டு, சென்ற வழியேலேயே திரும்பியும் வருகின்றது. இவ்வாறு உள்ளே சென்ற மூச்சுக் காற்று, வெளியே வர வில்லையென்றாலும், வெளியே சென்ற மூச்சுக் காற்று உள்ளே நுழைந்தும் செயல்படவில்லை என்றாலும் அந்த மூச்சற்ற தேகம் ஜடம் என்பதை அறிய வேண்டும்.

காயமே இது பொய்யடா -
வெறும் காற்றடைத்த பையடா
மாயனார் குயவன் செய்த
மண் பாண்டம் ஓடடா!'

என்று சித்தர் ஒருவர் பாடினார்.

இவ்வாறு, ஜடமான ஒன்று காற்றினால் மட்டும் இயங்க முடியும் என்றால், எத்தனையோ ஜடப் பொருட்களில் இதே காற்று உள்ளும், புறமும் சென்று, வந்துக் கொண்டுதான் இருக்கின்றது.

இது போன்று, எங்கு எல்லாம் இயக்கம் இருக்கின்றதோ, அங்கு நிச்சயமாக அசையும், அசையாப் பொருட்கள் இரண்டும் இருக்கும்.

ஆனால், அவைகளால் ஏன் உயிருடன் இயங்க முடிவதில்லை என்று ஒரு நாளாவது யோசித்திருக் கின்றோமா?

ஒரு அசைவற்ற ஜடப்பொருள் அசையக்கூடிய ஜீவத்துவத்தை அடைய அதன் உள்ளே ஏதோ ஒன்று நிச்சயமாக இருக்க வேண்டும்.

உதாரணமாக,

ஒரு ரயில் வண்டி அசைவுடன் இயங்க, அசையாத தண்டவாளங்கள் தேவை.



ஒரு பேருந்து அசைவுடன் இயங்க, அசையாத சாலை இருக்க வேண்டும்.

ஆனால், அசையாத, அசையக்கூடிய இரண்டு ஜடப்பொருட்களும் தானாகவே இயங்கி விடாது.

அவைகளை இயக்க ஒரு சைதன்யமான ஓட்டுநர் இருக்க வேண்டும்.

அதாவது, ஒரு செயல் நடைபெற வேண்டுமென்றால், அசையும், அசையா இரு ஜடப் பொருட்கள் இருந்தால் மட்டும் போதாது, அவைகளை இயக்க ஒரு இயக்குனரும் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

அப்படிப் பார்க்கின்ற பொழுது,

இந்த அசையா தேகத்தினை, அசைகின்ற மூச்சுக் காற்று மட்டும் உள்ளும், புறமும் சென்று வந்துக் கொண்டு இருந்தால் இந்த தேகம் இயங்கி விடுமா? என்றால் நிச்சயமாக இயங்காது.

காரணம், செத்த பிணம் என்ற தேகத்தில் கூட இதே காற்று உள்ளும், புறமும் சென்று வந்துக் கொண்டுதான் இருக்கும். ஆனால், மூச்சு மட்டும் இயங்குவதில்லையே. ஏன்?

அசைகின்ற காற்றும், அசையாத தேகமும் இயங்க அதற்கு ஒரு இயக்குனர் தேவை.

அவனைத்தான் பரமா(ஆ)த்மா, பரப்பிரம்மம், இறைவன், என்று நாம ரூபங்களை சூட்டி அவனை அழைத்து ஆனந்தப் படுகின்றோம்.

அப்படியானால், இந்த மூச்சுப் பயிற்சி, பிராணாயாமம், அஷ்டாங்க யோகம், வாசி யோகம் என்று எத்தனையோ பயிற்சி முறைகளை மனிதர்கள் கையாளுகின்றனரே அதன் தாத்பரியம் என்ன என்று யோசித்தீர்களேயானால், அந்த பயிற்சிகள் அனைத்துமே இந்த அழியக்கூடிய தேகத்தினை சிறிது நாட்கள் நீடித்து வைத்துக் கொள்ள மட்டுமே பயன்படும். ஆனால், என்றாவது ஒரு நாள் இந்த தேகம் (உடல்) அழிந்து விடும்.

சரி!

இறை நாம ஜபம், பூசை, புனஸ்காரங்கள், யாக யக்ஞங்கள், ஆலய வழிபாடுகள் போன்றவைகள்

எதற்காக என்று யோசித்தீர்களேயானால், இவைகள் அனைத்தும் மனதினை செம்மைப் படுத்துவதற்காக மட்டுமே பயன்படும்.

அதாவது, அழியக் கூடிய கண்கள், காதுகள், மூக்கு, வாய், உடம்பின் மேல் போர்த்தப் பட்டுள்ள தோல் போன்ற புறக்கரணங்களைக் கொண்ட இந்த உடல், மற்றும் அழியக் கூடிய அந்தக்கரணங்களைக் கொண்ட மனம், சித்தம், புத்தி அஹங்காரம் போன்றவைகளை செம்மைப்படுத்துவதற்கு மட்டுமே இவைகள் பயன்பாட்டில் உள்ளன.

இந்த இரண்டு காரியங்களினாலும் இவைகளை இயக்குகின்ற இயக்குனரான அந்த பரமா(ஆ)த்மாவை அறிய முடியாது.

உதாரணமாக, வேகமாக ஓடுகின்ற இரயிலைப் பார்க்கின்ற குழந்தை, அந்த இரயிலையும், ரயில் தண்டவாளங் களையும் பார்த்து ஆச்சரியப்படும். எப்படி இந்த இரயில் வேகமாக ஓடுகின்றது என்று வாயைப் பிளந்து வேடிக்கை மட்டும் பார்க்குமே ஒழிய, அதை ஓட்டுகின்ற ஓட்டுனரைப் பற்றி அந்தக் குழந்தைக்கு தெரியாது.

இதில் ஒரு சில புத்திசாலி குழந்தைகள் அதன் அப்பாவிடம் அப்பா! இந்த இரயில் எப்படி இவ்வளவு வேகமாக ஓடுகின்றது என்று கேள்வியை கேட்டவுடன், அந்தக் குழந்தையின் அப்பாவும், இது தானாக ஓடுவதில்லை, இதனை இயக்கும் ஓட்டுனர் ஒருவர் உள்ளே இருக்கின்றார் என்று விளக்கம் கொடுத்து அந்த குழந்தைக்குப் புரிகின்ற அறிவைக் கொடுப்பார்.

அதுப்போல, சாதாரண பாமர மக்கள் இந்த யோகம், கர்மம், மற்றும் ஜபதபங்களில் சந்தோசத்தை அடைந்து அதிலேயே நின்று விட்டால், அவர்களைப் பற்றி யாரும் கவலைப்படப் போவதில்லை.

ஆனால், இவைகளினால் எனக்கு திருப்தி ஏற்படவில்லை, இதற்கு மேலாக வேறு ஏதோ ஒன்று இருக்கின்றது. அத்தகைய மோக்ஷத்தை அடைய ஆர்வம் கொண்டவர்களை சாஸ்திரம் **“முமுக்ஷு”** என்று அழைக்கின்றது.

அவர்களே அந்த புத்திசாலி குழந்தையைப் போன்று கேள்விகளைக் கேட்டு, சந்தேகத்தை தெளிவு படுத்திக் கொள்ள, அந்த அறிவான குழந்தை அப்பாவை நாடியதுப் போல, அறிவான இவர்கள் குருவை நாடுகின்றனர்.

அழியக் கூடிய அந்தக்கரணங்களையும், புறக்கரணங்களையும் காப்பாற்ற அறிவுரை கூறும் குருவிடம் சென்றவர்கள், அவரிடம் இருக்கின்ற அதைப் பற்றிய அறிவை மட்டுமே கற்றுக் கொண்டு வந்து செயல்களைச் செய்து, நாளடைவில் சத்து இழந்து செத்தும் போகின்றார்கள்.

ஆனால், என்றும், எக்காலத்திலும் அழியாத ஆன்மாவை அறிந்த சத்குருவை நாடிச் செல்கின் றவர்கள் அழியாத அந்த சைதன்யத்தைப் பற்றி அறிந்ததின் விளைவாக என்றுமே அழியாத பரமா(ஆ)னந்த நிலையை அடைகின்றார்கள்.

# 18. அகக்கரணமும், புறக்கரணமும்

அழியக்கூடிய அகக்கரண, புறக்கரண பயிற்சி முறைகளை விட்டு விட்டு, என்றுமே அழியாத அந்த சைதன்யத்துடன் இணைந்து அவனாகவே, அவனுடன் வாழுகின்ற வழிமுறைகளைப் பார்ப்போம்.

அசையக் கூடிய இரயில் வண்டி, அசையாத தண்டவாளங்களில் இயங்குவதற்குக் காரணமான அந்த ஓட்டுனரைப் பற்றி அறிந்தவன் அந்த இரயிலின் வேகமான இயக்கத்தினைப் பார்த்து, பயப்படுவதற்கோ, சந்தோசப்படுவதற்கோ அவசியம் உண்டாகாது அல்லவா?.

அதுப்போல, அசைகின்ற மூச்சுக்காற்றும், அசையாத தேகமும் இயங்குவதற்கான இயக்குனர் உள்ளே இருப்பதைப்பற்றி அறிந்துக் கொண்டவன், அந்த தேகத்தினைப் பார்த்து பயப்படுவதற்கோ, சந்தோசப்படுவதற்கோ என்ன அவசியம் இருக்க முடியும்?

இரயிலை இயக்குகின்ற ஓட்டுனரின் திறமையை மட்டும் இரசித்துக் கொண்டு, அந்த இரயிலைப் பற்றி கவலைப்படாத அறிவாளிப் பயணியைப் போன்றே, தேகத்தின் இயக்கத்தை இயக்குகின்ற அந்த இயக்குனரான இறைவனின் திறமையைப் பார்த்து இரசித்துக் கொண்டு இந்த தேகத்தில் பயணிக் கின்றவனே அறிவாளி ஆவான்.

இதில் இன்னும் சிறந்த அறிவைக் கொண்டவன் அந்த இரயிலின் இயக்குனரைப்பார்த்து, இதை எப்படி இயக்குவது என்று அறிந்துக் கொள்ள முயற்சிப்பான்.

அதன் விளைவாக அவன் அந்த இயக்குனரை அறிந்து, அவரிடம் அந்த இரயிலை இயக்கும் வழிமுறைகளை அறிந்து கொண்டான் என்றால், அவனையும் அந்த இரயிலை இயக்கக்கூடிய அறிவைப் பெற்ற ஓட்டுனர் அங்கீகாரம் கொடுப்பதுப் போன்று, இந்த தேகத்தை இயக்குகின்ற இயக்குனரான பரமா(ஆ)ன்மாவை அறிந்தவன் அந்த பரமா(ஆ)ன்மா வாகவே அங்கீகரிக்கப்படுகின்றான்.

இந்த இரயிலை இயக்க அதன் தொழில் நுட்பம் அடங்கிய புத்தகங்களையும், இயக்குனரான ஓட்டுனரை ஆசிரியராகவும் கொண்டவன் மட்டுமே அந்த இரயிலை ஓட்டும் வழிமுறைகளை அறிய முடியும்.

அதுபோன்றே, ஆன்மாவை அறிகின்ற ஆர்வம் உடையவன், அந்த ஆன்மாவைப் பற்றி அறிய உதவும் சாஸ்திரங்களையும், அதைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியராக சத்குருவையும் கொண்டவன் மட்டுமே அந்த பரமா(ஆ)ன்மாவை அறிந்து கொள்ள முடியும்.

இரயில் எஞ்சினைப் பற்றிய சூக்ஷும விசயங்களை அறிந்து, அதை சரியாக இயக்கி, அந்த இரயிலை லாவகமாக, கட்டுப்பாட்டுடன் பிரேக் பிடிக்க வேண்டிய இடத்தில் பிடித்தும், விட வேண்டிய இடத்தில் விட்டும், அந்த இரயிலை கையாளும் திறமை அந்த ஓட்டுனரிடன் இருப்பது போன்று, இந்த தேகத்தைப் பற்றிய சூக்ஷும விசயத்தை அறிந்து, இந்த

தேகத்தினை லாவகமாக கட்டுப்பாட்டுடன் கையாளும் திறமை அந்த இயக்குனரான பரமா(ஆ)ன்மாவிடம் மட்டுமே இருக்கின்றது.

அதனால், சதா ஸர்வ காலமும் ஆற்றலுடன் நிர்வகிக்கப்படும் இந்த மானிட தேகத்தை, அழகாக ஆலோசித்து, படைத்து, அந்த தேகத்தை, மனதுடன் தொடர்பு படுத்தி, அந்த மந்தினை செம்மைப்படுத்த எது சரி?, எது தவறு? என்று நிச்சயிக்கவல்ல சத்புத்தியை கூட அவரே அனுக்ரஹித்து வழங்கியது மட்டுமின்றி, அது ஜனன - மரண சக்ரத்தில் சிக்கிக் கொண்டு, அனேக ஆபத்தான சிக்கல்களில் விழும்படியான மாயையின் சங்கிலிப் பிடியிலிருந்து ரக்ஷித்துக் காத்துக் கொள்வதற்கு, ஒரு சுலபமான, வெளிப்படையான வழியையும் அந்த பரமா(ஆ)ன்மாவே மிகுந்த தயையுடன் அருள் பாளித்துள்ளார்.

# 19. ஆன்மாவை அறியும் ஜபம்

அதுவே உத்தம ஜபம்!

மஹாமந்திர ஜபம்! மனதை செம்மைப்படுத்தும் ஜபம்!

அப்பேர்பட்ட சாதனையின் பெயர்தான் “**அஜபாஜபம்**” என்பதாகும்.

**ஜபம்** என்றால் ஜபிக்க வேண்டும், **அஜபா** என்றால், இதை ஜபிக்க வேண்டிய அவசியமில்லை. உச்சரித்தல் கூட தேவையில்லை.

ஆனால், நாம் நித்யம் உள்வாங்கி - வெளிவிடும் (காற்று) சாதாரணமாக மூக்கின் வழியாக சுவாஸ துவாரங்களின் வழியாகவே சகஜமாக இந்த ஜபம் நடக்கும்.

இந்த மூச்சுக் காற்றை இழுத்து, வெளியே விடவேண்டிய அவசியம் எதுவும் இல்லை. சாதரணமாக உள்ளேயும், வெளியேயும் சென்று வந்துக் கொண்டிருக்கின்ற மூச்சுக்காற்றை விலகியிருந்து கவனித்துக் கொண்டிருந்தாலே போதுமானது.

நாளடைவில் உள் - வெளி மூச்சுக்கள் ரொம்ப ரொம்ப தீர்க்கமாகிக்கொண்டே போகும்.

மூச்சு அடங்கியிருக்கிற காலமும் அதிகமாகிக் கொண்டே போகும். ஆரம்பத்தில் ஏதோ நமக்குத் தெரிந்த மட்டும் சித்தத்தைக் கொஞ்சம் சாந்தப்படுத்திக்கொண்டு பண்ணினாலும் போகப் போகத் தானாகவே உண்மையான பரமசாந்தம் உண்டாகும்.

ப்ராணாயாமம், வாசியோகம் போன்று அடக்கி, கிடக்கிச் செய்ய வேண்டிய அவசியம் கொஞ்சம் கூட இல்லாமல் அநாயாஸமாக பரம சாந்தமாக மூச்சும், எண்ணமும் புறப்படுகிற ஆத்ம ஸ்தானத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும்.

இதிலே ஒரு மந்திர ஜபமுமில்லையல்லவா?

அதனால் '**அஜபா**' என்று பெயர்.

அதாவது, சாதகனது மனமானது செம்மை அடைந்து விட்டால், அதன் பிறகு அவன் மந்திரத்தை ஜபிக்க வேண்டிய அவசியம் இல்லை.

அதாவது, ஜபிக்கப்படாத மந்திரம் என்பதினால், அதனை "**அஜபா**" என்று அழைக்கப்படுகின்றது.

"**ஜபா**" என்பதற்கு எதிர்பதமாக "**அஜபா**" என்று அறியவும்.

அதாவது, சமஸ்கிருத மொழியில் ஒரு வார்த்தையின் முன்பு "**அ**" என்ற எழுத்து சேர்க்கப் பட்டால், அது அந்த வார்த்தைக்கு எதிர்பதம் கொண்ட வார்த்தை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

<u>உதாரணமாக,</u>

| | | |
|---|---|---|
| சுபம் | - | அசுபம் |
| மங்கலம் | - | அமங்கலம். |
| திதி | - | அதிதி. |
| ஹிம்சை | - | அஹிம்சை. |
| ஞானம் | - | அஞ்ஞானம் |

இதுப்போன்று அறிய வேண்டும்.

அஜபா மந்திரத்தை அறிந்தவன், அந்த மந்திரத்தின் மகத்தான பலனாக, அந்தப் பரம் பொருளை அறிந்து கொள்வான்.

அந்த அழியாத பரம்பொருளை தன்னுள் அறிந்து கொண்டவன், அழியக் கூடிய பொருளை என்றுமே விரும்ப மாட்டான். அதனால், அவன் தன் உண்மை நிலையை அறிந்ததின் பலனாக மறைகள் (சாஸ்திரங்கள்) கூறுகின்ற நிறைவான மனிதனாக மாறி விடுவான்.

அப்படிப்பட்ட தன்னை அறிந்த மாந்தர்களை நிறைமொழி மாந்தர்கள் என்று தொல்காப்பியம் வர்ணித்து, அவர்கள் வாய்மொழியே "**மந்திரம்**" என்று அவர்களை பெருமைப் படுத்துகின்றது.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழிதானே மந்திரம்"

- தொல்காப்பியம்.

இவர்கள் சொல்லும் மொழி எல்லாம் மந்திரங்கள் எனப்படும்.

அதனடிப்படையில் ரிஷிகளின் உபதேசங்கள், சித்தர்களின் வாக்குகள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்றவர்களின் பக்திப்பாடல்கள், ஸ்தோத்திரங்கள் ஆகியவை எல்லாமே மந்திரங்கள் என்று கருதலாம்.

ஆகவே, அப்படிப்பட்ட நிறைமொழி மாந்தர் மகத்தான மஹாமந்திரமான அஜபா மந்திரத்தை மனோ, வாக்கினால் ஜபிக்காமல், தன் தேகத்தை இயக்குகின்ற இயக்குனரான அந்த சர்வேஸ்வரனின் ஆத்மாவாகவே இருப்பதினாலேயே, அதை ஜபிக்காத "**அஜபா**" மந்திரமாக அறிகின்றோம்.

உபசாரமாக இதையும் ஒரு "**ஜபம்**" என்று சொல்வதுண்டு.

அதுதான் "**ஹம்ஸ**" மந்த்ர ஜபம் என்பது.

மூச்சு உள்ளுக்கு இழுப்பது வெளியில் விடுவதும் உள்ளபோது "**ஹம்**", "**ஸ்**" என்ற ஒலிகளைப் போலவே சப்த சலனம் அமையும்.

அதனால்தான் "**ஹம்ஸ**" மந்திரம் என்பதாக வழங்கப்படுகின்றது.

அதோடு "**அஹம் ஸ:**" என்பதற்கு "**நான் அவன்**", அதாவது, "**ஜீவாத்மாவான நானே ஈச்வரன், அதாவது பரமாத்மா**" என்று இதற்கு அர்த்தம்.

“**நானே அவன்**” என்று மட்டும் நிறுத்திவிட்டால், ஜீவாத்மாதான் ஈச்வரன் என்று குறுக்கிவிட்டதாக விபரீத அர்த்தமும் உண்டாகி விடும் அல்லவா?

அதனால், “(**பரமாத்மாவான**) **அவனே நான்**” என்று சேர்த்துச் சொன்னதால்தான் முழுமையாகச் சொன்னதாகும்.

“**அவனே நான்**” என்பது “**ஸ: அஹம்**”.

சமஸ்கிருத சந்தியில் இது “**ஸோஹம்**” என்பதாகும்.

“**ஹம்ஸ:**” என்பதோடு “**ஸோஹம்**” என்பதையும் சேர்த்துச் சொல்வதுதான் ஹம்ஸ மந்த்ரம்.

மூக்குத் துவாரங்களில் தனக்குத்தானாகவே ஜபித்துக் கொண்டிருக்கும் “**அஜபா**” என்ற மந்திரம், மூக்குத் துவாரத்தின் உள்ளே நுழையும் பொழுது, “**ஹம்**” என்றும், வெளியே வரும் பொழுது, “**ஸ**” என்றும் இயங்குகின்றது.

அதனால், இதனை “**ஹம்ஸ**” மந்திரம் என்றும் அழைக்கின்றோம்.

அவ்வொடு சவ்வென் றரனுற்ற மந்திரம்
அவ்வொடு சவ்வென்ற தாரும் அறிகிலர்
அவ்வொடு சவ்வென்ற தாரும் அறிந்தபின்
அவ்வொடு சவ்வும் அனாதியு மாமே.

- *திருமந்திரம்.*

இறைவனை, `ஔ` என்றும், `**சௌ**` என்றும் பிறந்து பொருந்திய மந்திரமே `**அம்**` என்றும், `**சம்**` என்றும் அமைந்த மறை பொருளை ஒருவரும் அறியவில்லை.

அறிந்தார்களாயின் `**அம்சம்**` **(ஹம்ஸ)** எனப் படுகின்ற அந்த மந்திரந்தானே அனாதியான சிவமாய் நிற்கும்.

நாம் புத்தி பூர்வமாக, இறை நாமங்களை கூறிச் செய்கின்ற மற்ற மந்திரங்களைப் போல இந்த ஹம்ஸ மந்தரத்தையும் சொல்லிக்கொண்டே போனால்கூட, அதாவது ஜபித்துக் கொண்டே போனால்கூட, அந்த சப்த சலனங்கள் தானாகவே சாந்த ஸமாதிக்கு அழைத்துப் போகும் ப்ராண சஞ்சாரத்திற்கு உரியதாக இருப்பதால், செயற்கையாகச் செய்தாலும் சாதகனைத் தூண்டிவிட்டு, ஜீவாத்மா பரமாத்மாவுடன் அபேதமாயிருக்கும் சாந்த நிலைக்கு இந்த சாதனை அழைத்துப் போகும்போது ஒரு கட்டத்தில் ஜபம் நின்று **"அஜபா"**வாகும்.

"ந ஜப்யதே நோச்சார்யதே ஸ்வாஸ ப்ரஸ்வாஸயோர்
கமனாகமநாப்யாம் ஸம்பத்யதே இதி அஜபா||"*

என்று சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

"ஸதாநிஷ்ட்திவாராத்ரம் ஸஹஸ்ராண்யேகவிம்ஸதி: |
ஏதத்ஸங்க்யான்விதம் மந்த்ரம் ஜீவோ ஜபதி ஸர்வதா ||"

(தியானபிந்தூபநிஷத். 62-63).

பகல் இரவுமாக அதாவது (24) இருபத்தி நான்கு மணி நேரத்தில், ஒரு மனிதன் **21,600** முறை சுவாசிக்கின்றான்.

இந்த ஸ்வாஸ - ப்ரஸ்வாஸ மூலமாக "**ஹம்ஸ-ஹம்ஸ**:" என்று நிரந்தரமாக தானாகவே ஜபித்து கொண்டிருக்கும் என்று தியானபிந்தூபநிஷத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

"ஹகாரேண பஹிர்யாதி ஸகாரேண விஸேத்புன: |
ஹம் ஸ ஹம் ஸேத்யமும் மந்த்ரம் ஜீவோ ஜபதி ஸர்வதா |
அஜபா நாம காயத்ரீ யோகினாம் மோக்ஷதாம் ஸதா||"

மனிதன் ஸ்வாஸத்தை உள்ளிழுக்கும் பொழுது "**ஸ**:" என்றும், மறுபடியும் ஸ்வாஸத்தை விடும் பொழுது "**ஹ**" என்றும் த்வனிக்கும்.

*(நல்ல உறக்கத்திலிருக்கும் பொழுது இந்த த்வனி இன்னும் அதிகமாக கேட்கும்).*

இந்த விதமாக ஜீவன் "**ஹம்ஸ-ஹம்ஸ**" என்ற மந்திரத்தை நிரந்தரம் ஜபிக்கும்.

இப்படிப்பட்ட அஜபா காயத்ரீ யோகிகளுக்கு மோக்ஷ பிரதானமானதென்று **யோக சூடாமணி உபநிஷத்து** (31) மற்றும் **தியானபிந்தூபநிஷத்தில்** (61-73) கூறப்பட்டுள்ளது.

இது மட்டுமல்லாமல், **அஜபாஜபம்** போன்ற அதி உன்னதமான ஜபமோ, ஸர்வ உத்தமமான வித்யாவோ (கல்வியோ) வேறு இல்லை.

இதை மிஞ்சுமளவுக்கு வேறொரு புண்ணிய காரியம் இது வரையில் இல்லை.

இனி மேலும் இருக்கப் போவதில்லை என்று அஜபாவின் பலஸ்ருதியில் வெளிப்படையாகச் சொல்லப்பட்டுள்ளது.

**"அனயா ஸத்ருஸீ வித்யா அனயா ஸத்ருஸோ ஜப: | அனயா ஸத்ருஸம் புண்யம் ந பூதம் ந பவிஷ்யதி ||"**

மற்றுமொரு முக்கியமான விஷயம் என்ன வென்றால், முதன் முதலில் இந்த மந்திரத்தை ஏதாவது ஒரு குரு மூலமாக மட்டுமே தீக்ஷயை பெறவேண்டும். அதன் பின்னரே ஜபிக்க வேண்டும்.

ஏனென்றால், இங்கு,

“**ஸோ ஹம் ஸோ ஹம்**” என்றே மந்திர யோகம் கூறப்பட்டுள்ளது.

ஆனால் ஸுஷும்னாவில் இது விபரீதமாக,

“**ஹம்ஸ: ஹம்ஸ:**”

என்று ஜபிக்கப்படும் என்று ஒரு விசேஷமான வார்த்தையை பற்றி **யோகபீஜோபநிஷத்தில் (135)**, மற்றும் **யோகஸிகோபநிஷத்தில் (1-132,133)** குறிப்பிடப் பட்டுள்ளது.

இருந்தாலும், “**அஸ்யா: ஸங்கல்ப மாத்ரேண நர: பாபை: ப்ரமுச்யதே**” - என்றால் இப்படிப்பட்ட அஜபா காயத்ரீயை பற்றிய ஸங்கல்பத்தினால் மட்டுமே மனிதன்

பாபங்களிலிருந்து முக்தி பெறுவான் என்று த்யான பிந்தூபநிஷத்தில் (64) வர்ணிக்கப்பட்டுள்ளது.

குருவின் மூலம் பிரதானமாக தீக்ஷை எடுத்துக் கொள்வது அவ்வளவு வலுக்கட்டாயமானதல்ல என்பது தெரிய வருகிறது.

ஒரு வேளை குரு தீக்ஷை மூலம் இந்த மந்திரத்தை பெற்றால், ஜபம் இன்னும் பலம் பெறும் என்பதை கவனிக்கவும்.

ஸாதகர் "**ஹம் ஸ: ஹம் ஸ:**" என்றோ, இல்லை "**ஸோ ஹம், ஸோ ஹம்**" என்றோ, இந்த இரண்டில் எந்த விதமாக ஜபித்தாலும் அதன் பலன் மட்டும் சமமாகத் தான் இருக்கும் என்று புரிகின்றது.

அது மட்டுமல்லாமல், **ஹம்ஸ: ஹம்ஸ:** என்று சொல்லும் பொழுது இரண்டாவது முறையாக அது "**ஸோஹம்**" (**ஹம்ஸ:** ஸோ ஹம் ஸ:) என்று சகஜமாக மாறிவிடும் என்பதையும் அறிய முடிகிறது.

இப்பொழுது "**அஜபா காயத்ரீ**" உபாஸனா விதானம் பற்றி அறியலாம்.

எப்படிப்பட்ட சத்காரியத்திற்கும், எல்லா வற்றையும் விட, முதலில் குளித்து விட்டு மட்டுமே அதைச் செய்தாக வேண்டும்.

ஆனால், அஜபாகாயத்ரீ அனுஷ்டானார்த்தமாக மானசீக ஸ்நானம் செய்து கூட ஜபத்தை அனுஷ்டிக் கலாம்.

ஏனென்றால், முதலாக நேற்றைய சூரியோதயத்திலிருந்து இன்று சூரியோதயம் வரை செய்யப்பட்ட அஜபாஜபம் ஸமர்ப்பிப்பதற்கோ மற்றும் இன்றிலிருந்து நாளைய சூரியோதயம் வரை செய்யப் போகும் ஜபத்தை பற்றிய ஸங்கல்பம் செய்வதற்கு மானஸ - ஸரோவரத்தில் (மானசீக தீர்த்தம்) ஸ்நானம் செய்வதே ஸௌகரியமாக இருக்கும்.

மானசீக ஸரோவரத்தில் ஸ்நானம் செய்வது எவ்வளவோ விசேஷமானதென்று பல சாஸ்த்ர கிரந்தங்களில் கூறப்பட்டுள்ளது.

**இடா பகவதீகங்கா பிங்களா யமுனாநதீ |**
**தயோர்மத்யகதா நாடீ ஸுஷும்ணாக்யா ஸரஸ்வதீ ‖**
**ய: ஸ்நாதி மானஸேதீர்த்தே ஸ வை முக்தோ ந ஸம்ஸய: ‖**

இடா நாடி ஸாக்ஷாத் கங்காதேவி போன்றது என்றும், அதேபோல் பிங்களா நாடி யமுனாநதி போன்றது என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த இரண்டிற்கும் நடுவில் இருக்கும் ஸுஷும்னா நாடியே ஸரஸ்வதி நதியாக போற்றப் பட்டுள்ளது.

இந்த மூன்று வித நாடிகளுக்கும் சொல்லப்பட்ட மூன்று வித நதிகளின் த்ரிவேணி சங்கமம் ஸ்தல மென்றும் மானசீக தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தவர்கள் சகல பாபங்களிலிருந்து நிச்சயமாக முக்தியடைவார்கள்" என்பது ஐதீகம்.

அதனால், விடியற்காலை நேரத்தில், பிரம்ம முகூர்த்த காலத்தில் உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்டு, படுக்கையிலிருந்து எழுந்து கை - கால்களை சுத்தமாக கழுவிக் கொண்டு, நல்ல சுத்தமான நீரினால் வாய் கொப்பளித்து உமிழ வேண்டும்.

பிறகு இரவு உடுத்திக் கொண்டு தூங்கிய துணிகளை களைந்து விட்டு, சுத்தமான துணியை உடுத்த வேண்டும். அதன்பிறகு, ஆஸனத்தின் மேல் உட்கார்ந்துக் கொண்டு, அமைதியாக, உள்ளும், புறமும் வந்து சென்று கொண்டிருக்கின்ற மூச்சுக்காற்றை வெளியிலிருந்து கவனித்துக் கொண்டு மட்டுமே வர வேண்டும்.

மூச்சு உள்ளே நுழையும் தருணத்தில் "**ஹம்**" என்றும் வெளியேறும் தருணத்தில் "**ஸ**:" என்றும் மனதினால் மானஸீகமாக கூறுவது போன்று கவனத்தில் கொள்ளவும், இதை செயலாக செய்ய வேண்டிய அவசியமே இல்லை.

இந்த தொடர் அனுபவமே அந்த சாதகனை நாளடைவில் இந்த ஜபத்தை ஆஸனம் போட்டு அமர்ந்து செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல், எப்பொழுதும், எல்லாக்காலங்களிலும் உள்ளே சதா அந்த மந்திரம் ஜபிக்கமலேயே ஜபம் நடைப்பெற்றவாறு மாற்றத்திற்கு உட்படுத்தி, அந்த சாதகனை சாட்சாத் அந்த சர்வேஸ்வரனாக மாற்றிக் காண்பிக்கும் என்றால் அது மிகையாகது.

**ஓம் தத் சத்!**

# மந்திர ஜபத்தின் மகிமை!



ப்ரக்ஞன்